## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2011

## மதிப்பீட்டு அறிக்கை

# 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2011
# மதிப்பீட்டு அறிக்கை

## 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**தமிழ் மொழியும் இலக்கியமும்**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2011

**நிதி அனுசரணை**

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு
பாடசாலை கல்விமுறைமையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP - WB)

அச்சுப்பதிப்பு : அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
பானலுவ, பாதுக்க.

# அறிமுகம்

இலங்கையின் பொதுப் பரீட்சைகளில் க.பொ.த (சா.தர)ப் பரீட்சைக்கே அதிகளவான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் இப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழானது உயர் கல்விக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கு மட்டுமன்றி நடுத்தரமட்ட வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பல்கலைக்கழகங்களில் சில பாட நெறிகளுக்கான அடிப்படைத் தகைமையாகவும் கொள்ளப்படுகின்றது. இப்பரீட்சையின் நம்பகம், தகுதி, தரம் ஆகியனவே இதற்குக் காரணமாக அமைகின்றது.

இப்பரீட்சையில் உயர் அடைவைப் பெறுவதற்கு மாணவரும் அவர்களது அடைவை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் அயராது உழைக்கின்றனர். இவர்களது எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு உதவும் முகமாகவே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இந்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்விசார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோர் ஆகியோருக்கு பயனுடையதாக அமையும். எனவே, இந்த அறிக்கையை அனேகமானோரின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் நூலகத்தில் பேணுவது சிறந்ததாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். பாடக்குறிக்கோள்கள், பாட அடைவு தொடர்பான எண்ணளவிலான தகவல்கள் இந்தப் பாட வினாப்பத்திரத்தின் அடிப்படையில் பரீட்சார்த்திகளின் அடைவு ஆகியன ஒவ்வொரு வினாவுக்குமென தனித்தனியே பகுதி 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் மரபுரீதியான சோதனைக் கோட்பாடு (Classical testing theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item response theory) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இத்திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையினால் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் உச்ச நம்பகத்தன்மை, தகுதி ஆகியவற்றைக் கொண்டதாகும்.

தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தின் I,II,III ஆகிய வினாப்பத்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவு மற்றும் பின்னூட்டலுக்கான ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி II இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகளினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி III இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல்வேறு தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்களை அண்மிக்கத் தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை நடைமுறைப்படுத்தும் விதம் பற்றிய வழிகாட்டல் இதன்மூலம் கிடைக்கப்பெறுமென நினைக்கின்றேன்.

இந்த அறிக்கையின் தரத்தை மேம்படுத்தத்தக்க உங்களது ஆலோசனைகள், கருத்துக்கள் ஆகியவற்றை எமக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம். இந்த அறிக்கையைத் தயாரிக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கட்டுப்பாட்டுப் பரீட்சகர்கள் மற்றும் வளவாளர்களாகப் பங்கேற்று தகவல்களை வழங்கிய பிரதம/ மேலதிக, பிரதம/ உதவிப் பரீட்சகர்களுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2012 ஒக்ரோபர் 20
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | திரு. டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | திருமதி. கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பும் தொகுப்பும் | - | திருமதி. மை.ஜீவராணிபுனிதா<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| ஆக்கக் குழு | - | திருமதி. ரி. பாலசிங்கம்<br>ஓய்வு பெற்ற உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| | - | திருமதி. அ. கிருஷ்ணபிள்ளை<br>பிரதி அதிபர்<br>கொ/ ஹமீத் அல் ஹுசேனி கல்லூரி<br>கொழும்பு |
| | - | திருமதி. பி. மதுரநாயகம்<br>உதவிக்கல்விப் பணிப்பாளர்<br>வலயக் கல்வி அலுவலகம்<br>கிளிநொச்சி |
| | - | திரு. வா. சிவராசா<br>ஆசிரியர்<br>யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி |
| | - | திருமதி. ரஜிதா நகுலன்<br>ஆசிரியை<br>யா/ நெல்லியடி ம.ம.வி. |
| | - | திரு. ந. நேசகஜேந்திரன்<br>ஆசிரியர்<br>மட்/ கொல்லநுரை விவேகாநந்த வித்தியாலயம் |
| கணினி பக்க வடிவமைப்பு | - | திரு. பொ. அற்புதரூபன்<br>முகாமைத்துவ உதவியாளர்<br><br>செல்வி எஸ். றஹீனா ஹாஷிம்<br>கணினி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்


**பகுதி** I — **பக்க எண்**

**1** **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

**1.1** **பாடக் குறிக்கோள்கள்** 1

**1.2** **பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1 பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 2

1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 3

1.2.4 கல்வி வலயங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

**1.3.** **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

1.3.5 வினாப்பத்திரம் III வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 11

1.3.6 வினாப்பத்திரம் III இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 11

1.3.7 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்ட அடைவு 12

**பகுதி** II

**2** **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

**2.1** **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 13

2.1.2 வினாப்பத்திரம் I 14

2.1.3. வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம் 18

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் 19

2.1.5 வினாப்பத்திரம் I இல் ஒவ்வொரு வினாவுக்கும் மாணவர்கள் தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்) 21

2.1.6 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் 22

**2.2** **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 23

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் 24

**2.3** **வினாப்பத்திரம் III உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.3.1 வினாப்பத்திரம் III - கட்டமைப்பு 40

2.3.2 வினாப்பத்திரம் III - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் 41

2.3.3 வினாப்பத்திரம் III இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளின் தொகுப்பும் பொதுவான ஆலோசனைகளும் 59

**பகுதி** III

**3.0** **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

**3.1** **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 60

**3.2** **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 62

# பகுதி I

## 1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும் தொடர்பான தகவல்கள்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- ✶ தமிழ்மொழியைத் தொடர்பாடற் கருவியாக காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- ✶ இலக்கியங்களினூடாக சமூக, கலாசார விழுமியங்களை அறிந்து அவற்றைப் பெறுதல்.
- ✶ கலைகள், அறிவியல், தொழினுட்பத்துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- ✶ மொழியூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- ✶ தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியைச் சாதனமாகக் கொள்ளல்.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்

### 1.2.1 பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | - | - | - |
| தமிழ் | **235116** | **9018** | **244134** |
| ஆங்கிலம் | - | - | - |
| **மொத்தம்** | **235116** | **9018** | **244134** |

**அட்டவணை 1**

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெறப்பட்ட விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்தி | | தனிப்பட்ட பரீட்சார்த்தி | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 44643 | 18.99 | 304 | 3.37 | 44947 | 18.41 |
| B | 40122 | 17.06 | 727 | 8.06 | 40849 | 16.73 |
| C | 65785 | 27.98 | 3155 | 34.99 | 68940 | 28.24 |
| S | 48906 | 20.80 | 3193 | 35.41 | 52099 | 21.34 |
| W | 35660 | 15.17 | 1639 | 18.17 | 37299 | 15.28 |
| **மொத்தம்** | **235116** | **100** | **9018** | **100** | **244134** | **100** |

**அட்டவணை 2**

## 1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை:

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தியடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 3022 | 437 | 14.46 | 518 | 17.14 | 793 | 26.24 | 748 | 24.75 | 2496 | 82.59 | 526 | 17.41 |
| 2. கம்பஹா | 1065 | 110 | 10.33 | 160 | 15.02 | 317 | 29.77 | 262 | 24.60 | 849 | 79.72 | 216 | 20.28 |
| 3. களுத்துறை | 1348 | 89 | 6.60 | 145 | 10.76 | 346 | 25.67 | 370 | 27.45 | 950 | 70.47 | 398 | 29.53 |
| 4. கண்டி | 4321 | 321 | 7.43 | 594 | 13.75 | 1165 | 26.96 | 1194 | 27.63 | 3274 | 75.77 | 1047 | 24.23 |
| 5. மாத்தளை | 1082 | 152 | 14.05 | 178 | 16.45 | 298 | 27.54 | 261 | 24.12 | 889 | 82.16 | 193 | 17.84 |
| 6. நுவரெலியா | 4946 | 325 | 6.57 | 694 | 14.03 | 1474 | 29.80 | 1508 | 30.49 | 4001 | 80.89 | 945 | 19.11 |
| 7. காலி | 306 | 24 | 7.84 | 30 | 9.80 | 61 | 19.93 | 66 | 21.57 | 181 | 59.15 | 125 | 40.85 |
| 8. மாத்தறை | 379 | 32 | 8.44 | 48 | 12.66 | 100 | 26.39 | 98 | 25.86 | 278 | 73.35 | 101 | 26.65 |
| 9. அம்பாந்தோட்டை | 123 | 9 | 7.32 | 9 | 7.32 | 30 | 24.39 | 29 | 23.58 | 77 | 62.60 | 46 | 37.40 |
| 10. யாழ்ப்பாணம் | 10103 | 1254 | 12.41 | 1656 | 16.39 | 2721 | 26.93 | 2344 | 23.20 | 7975 | 78.94 | 2128 | 21.06 |
| 11. கிளிநொச்சி | 1975 | 105 | 5.32 | 205 | 10.38 | 442 | 22.38 | 541 | 27.39 | 1293 | 65.47 | 682 | 34.53 |
| 12. மன்னார் | 1569 | 245 | 15.62 | 346 | 22.05 | 516 | 32.89 | 361 | 23.01 | 1468 | 93.56 | 101 | 6.44 |
| 13. வவுனியா | 2680 | 239 | 8.92 | 451 | 16.83 | 836 | 31.19 | 735 | 27.43 | 2261 | 84.37 | 419 | 15.63 |
| 14. முல்லைத்தீவு | 1535 | 80 | 5.21 | 176 | 11.47 | 379 | 24.69 | 405 | 26.38 | 1040 | 1.72 | 495 | 32.25 |
| 15. மட்டக்களப்பு | 6640 | 496 | 7.47 | 939 | 14.14 | 1803 | 27.15 | 1823 | 27.45 | 5061 | 76.22 | 1579 | 23.78 |
| 16. அம்பாறை | 5032 | 407 | 8.09 | 772 | 15.34 | 1642 | 32.63 | 1404 | 27.90 | 4225 | 83.96 | 807 | 16.04 |
| 17. திருகோணமலை | 3876 | 397 | 10.24 | 478 | 12.33 | 987 | 25.46 | 1124 | 29.00 | 2986 | 77.04 | 890 | 22.96 |
| 18. குருநாகல் | 1783 | 139 | 7.80 | 236 | 13.24 | 445 | 24.96 | 524 | 29.39 | 1344 | 75.38 | 439 | 24.62 |
| 19. புத்தளம் | 2101 | 174 | 8.28 | 282 | 13.42 | 619 | 29.46 | 587 | 27.94 | 1662 | 79.11 | 439 | 20.89 |
| 20. அனுராதபுரம் | 857 | 37 | 4.32 | 83 | 9.68 | 229 | 26.72 | 266 | 31.04 | 615 | 71.76 | 242 | 28.24 |
| 21. பொலன்னறுவை | 367 | 54 | 14.71 | 57 | 15.53 | 115 | 31.34 | 104 | 28.34 | 330 | 89.92 | 37 | 10.08 |
| 22. பதுளை | 2338 | 144 | 6.16 | 260 | 11.12 | 704 | 30.11 | 737 | 31.52 | 1845 | 78.91 | 493 | 21.09 |
| 23. மொனராகலை | 222 | 10 | 4.50 | 25 | 11.26 | 49 | 22.07 | 68 | 30.63 | 152 | 68.47 | 70 | 31.53 |
| 24. இரத்தினபுரி | 986 | 33 | 3.35 | 75 | 7.61 | 194 | 19.68 | 335 | 33.98 | 637 | 64.60 | 349 | 35.40 |
| 25. கேகாலை | 527 | 26 | 4.93 | 50 | 9.49 | 165 | 31.31 | 160 | 30.36 | 401 | 76.09 | 126 | 23.91 |
| **மொத்தம்** | **60149** | **5400** | **8.98** | **8599** | **14.30** | **16721** | **27.80** | **16319** | **27.13** | **47039** | **78.20** | **13110** | **21.80** |

**அட்டவணை 3**

## 1.2.4 கல்வி வலயங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை :

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 2787 | 421 | 15.11 | 488 | 17.51 | 733 | 26.30 | 684 | 24.54 | 2326 | 83.46 | 461 | 16.54 |
| 2. ஹோமாகம | 78 | 1 | 1.28 | 1 | 1.28 | 16 | 20.51 | 18 | 23.08 | 36 | 46.15 | 42 | 53.85 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 25 | 1 | 4.00 | 3 | 12.00 | 7 | 28.00 | 7 | 28.00 | 18 | 72.00 | 7 | 28.00 |
| 4. பிலியந்தல | 132 | 14 | 10.61 | 26 | 19.70 | 37 | 28.03 | 39 | 29.55 | 116 | 87.88 | 16 | 12.12 |
| 5. கம்பஹா | 279 | 31 | 11.11 | 35 | 12.54 | 71 | 25.45 | 64 | 22.94 | 201 | 72.04 | 78 | 27.96 |
| 6 மினுவாங்கொட | 204 | 28 | 13.73 | 46 | 22.55 | 61 | 29.90 | 46 | 22.55 | 181 | 88.73 | 23 | 11.27 |
| 7. நீர்கொழும்பு | 287 | 28 | 9.76 | 32 | 11.15 | 85 | 29.62 | 76 | 26.48 | 221 | 77.00 | 66 | 23.00 |
| 8. களனி | 295 | 23 | 7.80 | 47 | 15.93 | 100 | 33.90 | 76 | 25.76 | 246 | 83.39 | 49 | 16.61 |
| 9. களுத்துறை | | 71 | 7.47 | 114 | 11.99 | 254 | 26.71 | 269 | 28.29 | 708 | 74.45 | 243 | 25.55 |
| 10. மத்துகம | 139 | 6 | 4.32 | 8 | 5.76 | 32 | 23.02 | 36 | 25.90 | 82 | 58.99 | 57 | 41.01 |
| 11. ஹொரணை | 258 | 12 | 4.65 | 23 | 8.91 | 60 | 23.26 | 65 | 25.19 | 160 | 62.02 | 98 | 37.98 |
| 12. கண்டி | 948 | 137 | 14.45 | 218 | 23.00 | 253 | 26.69 | 198 | 20.89 | 806 | 85.02 | 142 | 14.98 |
| 13. தெனுவர | 540 | 33 | 6.11 | 54 | 10.00 | 141 | 26.11 | 171 | 31.67 | 399 | 73.89 | 141 | 26.11 |
| 14. கம்பளை | 1039 | 47 | 4.52 | 117 | 11.26 | 275 | 26.47 | 319 | 30.70 | 758 | 72.95 | 281 | 27.05 |
| 15. தெல்தெனியா | 172 | 5 | 2.91 | 13 | 7.56 | 39 | 22.67 | 57 | 33.14 | 114 | 66.28 | 58 | 33.72 |
| 16. வத்தேகம | 748 | 44 | 5.88 | 84 | 11.23 | 202 | 27.01 | 222 | 29.68 | 552 | 73.80 | 196 | 26.20 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 874 | 55 | 6.29 | 108 | 12.36 | 255 | 29.18 | 227 | 25.97 | 645 | 73.80 | 229 | 26.20 |
| 18. மாத்தளை | 914 | 129 | 14.11 | 154 | 16.85 | 258 | 28.23 | 217 | 23.74 | 758 | 82.93 | 156 | 17.07 |
| 19. கலேவெல | 137 | 23 | 16.79 | 22 | 16.06 | 30 | 21.90 | 30 | 21.90 | 105 | 76.64 | 32 | 23.36 |
| 20. நாஉல | 31 | 0 | 0.00 | 2 | 6.45 | 10 | 32.26 | 14 | 45.16 | 26 | 83.87 | 5 | 16.13 |
| 21. வில்கமுவ | - | - | - | - | - | - | - | - | -- | - | - | - | - |
| 22. நுவரெலியா | 1941 | 124 | 6.39 | 279 | 14.37 | 608 | 31.32 | 570 | 29.37 | 1581 | 81.45 | 360 | 18.55 |
| 23. கொத்மலை | 536 | 40 | 7.46 | 68 | 12.69 | 141 | 26.31 | 188 | 35.07 | 437 | 81.53 | 99 | 18.47 |
| 24. ஹட்டன் | 1992 | 137 | 6.88 | 284 | 14.26 | 572 | 28.71 | 591 | 29.67 | 1584 | 79.52 | 408 | 20.48 |
| 25. வலப்பனை | 373 | 24 | 6.43 | 58 | 15.55 | 131 | 35.12 | 120 | 32.17 | 333 | 89.28 | 40 | 10.72 |
| 26. ஹங்குரன்கெத்த | 104 | 0 | 0.00 | 5 | 4.81 | 22 | 21.15 | 39 | 37.50 | 66 | 63.46 | 38 | 36.54 |
| 27. காலி | 230 | 20 | 8.70 | 26 | 11.30 | 47 | 20.43 | 51 | 22.17 | 144 | 62.61 | 86 | 37.39 |
| 28. எல்பிட்டிய | 44 | 2 | 4.55 | 3 | 6.82 | 8 | 18.18 | 7 | 15.91 | 20 | 45.45 | 24 | 54.55 |
| 29. அம்பலாங்கொடை | 14 | 2 | 14.29 | 1 | 7.14 | 4 | 28.57 | 4 | 28.57 | 11 | 78.57 | 3 | 21.43 |
| 30. உடுகம | 18 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 11.11 | 4 | 22.22 | 6 | 33.33 | 12 | 66.67 |
| 31. மாத்தறை | 180 | 24 | 13.33 | 30 | 16.67 | 46 | 25.56 | 34 | 18.89 | 134 | 74.44 | 46 | 25.56 |
| 32. அக்குரஸ்ஸ | 83 | 6 | 7.23 | 7 | 8.43 | 28 | 33.73 | 29 | 34.94 | 70 | 84.34 | 13 | 15.66 |
| 33. முலடியன-ஹக்மன | 29 | 0 | 0.00 | 3 | 10.34 | 6 | 20.69 | 8 | 27.59 | 17 | 58.62 | 12 | 41.38 |
| 34. மொறவக்க | 71 | 2 | 2.82 | 7 | 9.86 | 17 | 23.94 | 21 | 29.58 | 47 | 66.20 | 24 | 33.80 |
| 35. தங்காலை | 16 | 0 | 0.00 | 1 | 6.25 | 3 | 18.75 | 6 | 37.50 | 10 | 62.50 | 6 | 37.50 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 36. அம்பாந்தோட்டை | 115 | 9 | 7.83 | 8 | 6.96 | 28 | 24.35 | 27 | 23.48 | 72 | 62.61 | 43 | 37.39 |
| 37. வலஸ்முல்லை | 8 | 0 | 0.00 | 1 | 12.50 | 2 | 25.00 | 2 | 25.00 | 5 | 62.50 | 3 | 37.50 |
| 38. யாழ்ப்பாணம் | 3668 | 619 | 16.88 | 688 | 18.76 | 963 | 26.25 | 758 | 20.67 | 3028 | 82.55 | 640 | 17.45 |
| 39. தீவகம் | 705 | 34 | 4.82 | 69 | 9.79 | 185 | 26.24 | 195 | 27.66 | 483 | 68.51 | 222 | 31.49 |
| 40. தென்மராட்சி | 1088 | 116 | 10.66 | 178 | 16.36 | 271 | 24.91 | 231 | 21.23 | 796 | 73.16 | 292 | 26.84 |
| 41. வலிகாமம் | 2804 | 288 | 10.27 | 447 | 15.94 | 852 | 30.39 | 729 | 26.00 | 2316 | 82.60 | 488 | 17.40 |
| 42. வடமராட்சி | 1838 | 197 | 10.72 | 274 | 14.91 | 450 | 24.48 | 431 | 23.45 | 1352 | 73.56 | 486 | 26.44 |
| 43. கிளிநொச்சி | 1975 | 105 | 5.32 | 205 | 10.38 | 442 | 22.38 | 541 | 27.39 | 1293 | 65.47 | 682 | 34.53 |
| 44. மன்னார் | 1266 | 232 | 18.33 | 318 | 25.12 | 414 | 32.70 | 254 | 20.06 | 1218 | 96.21 | 48 | 3.79 |
| 45. மடு | 303 | 13 | 4.29 | 28 | 9.24 | 102 | 33.66 | 107 | 35.31 | 250 | 82.51 | 53 | 17.49 |
| 46. வவுனியா - தெற்கு | 2072 | 211 | 10.18 | 354 | 17.08 | 644 | 31.08 | 567 | 27.36 | 1776 | 85.71 | 296 | 14.29 |
| 47. வவுனியா - வடக்கு | 608 | 28 | 4.61 | 97 | 15.95 | 192 | 31.58 | 168 | 27.63 | 485 | 79.77 | 123 | 20.23 |
| 48. முல்லைத்தீவு | 1013 | 57 | 5.63 | 121 | 11.94 | 252 | 24.88 | 255 | 25.17 | 685 | 67.62 | 328 | 32.38 |
| 49. துணுக்காய் | 522 | 23 | 4.41 | 55 | 10.54 | 127 | 24.33 | 150 | 28.74 | 355 | 68.01 | 167 | 31.99 |
| 50. மட்டக்களப்பு | 2620 | 221 | 8.44 | 339 | 12.94 | 644 | 24.58 | 714 | 27.25 | 1918 | 73.21 | 702 | 26.79 |
| 51. கல்குடா | 1183 | 31 | 2.62 | 102 | 8.62 | 296 | 25.02 | 373 | 31.53 | 802 | 67.79 | 381 | 32.21 |
| 52. பட்டிருப்பு | 1617 | 60 | 3.71 | 210 | 12.99 | 455 | 28.14 | 476 | 29.44 | 1201 | 74.27 | 416 | 25.73 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 1220 | 184 | 15.08 | 288 | 23.61 | 408 | 33.44 | 260 | 21.31 | 1140 | 93.44 | 80 | 6.56 |
| 54. அம்பாறை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 55. கல்முனை | 2189 | 232 | 10.60 | 360 | 16.45 | 664 | 30.33 | 587 | 26.82 | 1843 | 84.19 | 346 | 15.81 |
| 56. சம்மாந்துறை | 1130 | 74 | 6.55 | 107 | 9.47 | 357 | 31.59 | 316 | 27.96 | 854 | 75.58 | 276 | 24.42 |
| 57. மஹாஓய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 58. தெஹியத்தகண்டிய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 59. அக்கரைப்பற்று | 1713 | 101 | 5.90 | 305 | 17.81 | 621 | 36.25 | 501 | 29.25 | 1528 | 89.20 | 185 | 10.80 |
| 60. திருகோணமலை | 1517 | 288 | 18.98 | 249 | 16.41 | 394 | 25.97 | 341 | 22.48 | 1272 | 83.85 | 245 | 16.15 |
| 61. மூதூர் | 985 | 45 | 4.57 | 99 | 10.05 | 251 | 25.48 | 324 | 32.89 | 719 | 72.99 | 266 | 27.01 |
| 62. கந்தளாய் | 125 | 13 | 10.40 | 20 | 16.00 | 39 | 31.20 | 35 | 28.00 | 107 | 85.60 | 18 | 14.40 |
| 63. கிண்ணியா | 1249 | 51 | 4.08 | 110 | 8.81 | 303 | 24.26 | 424 | 33.95 | 888 | 71.10 | 361 | 28.90 |
| 64. குருநாகல் | 401 | 23 | 5.74 | 38 | 9.48 | 92 | 22.94 | 115 | 28.68 | 268 | 66.83 | 133 | 33.17 |
| 65. குளியாப்பிட்டிய | 262 | 22 | 8.40 | 35 | 13.36 | 56 | 21.37 | 83 | 31.68 | 196 | 74.81 | 66 | 25.19 |
| 66 நிக்கவெரட்டிய | 160 | 16 | 10.00 | 22 | 13.75 | 45 | 28.13 | 46 | 28.75 | 129 | 80.63 | 31 | 19.38 |
| 67. மாகோ | 142 | 5 | 3.52 | 15 | 10.56 | 42 | 29.58 | 42 | 29.58 | 104 | 73.24 | 38 | 26.76 |
| 68. கிரியுள்ள | 569 | 57 | 10.02 | 84 | 14.76 | 142 | 24.96 | 170 | 29.88 | 453 | 79.61 | 116 | 20.39 |
| 69. இப்பாகமுவ | 249 | 16 | 6.43 | 42 | 16.87 | 68 | 27.31 | 68 | 27.31 | 194 | 77.91 | 55 | 22.09 |
| 70. புத்தளம் | 1883 | 154 | 8.18 | 262 | 13.91 | 549 | 29.16 | 522 | 27.72 | 1487 | 78.97 | 396 | 21.03 |
| 71. சிலாபம் | 218 | 20 | 9.17 | 20 | 9.17 | 70 | 32.11 | 65 | 29.82 | 175 | 80.28 | 43 | 19.72 |
| 72. அனுராதபுரம் | 300 | 8 | 2.67 | 28 | 9.33 | 85 | 28.33 | 88 | 29.33 | 209 | 69.67 | 91 | 30.33 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 73. தபுத்தேகம | 48 | 3 | 6.25 | 3 | 6.25 | 8 | 16.67 | 16 | 33.33 | 30 | 62.50 | 18 | 37.50 |
| 74. கெக்கிராவ | 301 | 24 | 7.97 | 40 | 13.29 | 77 | 25.58 | 80 | 26.58 | 221 | 73.42 | 80 | 26.58 |
| 75. கலென்பின்துனுவெவ | 123 | 0 | 0.00 | 9 | 7.32 | 39 | 31.71 | 45 | 36.59 | 93 | 75.61 | 30 | 24.39 |
| 76. கெபித்திகொல்லாவ | 85 | 2 | 2.35 | 3 | 3.53 | 20 | 23.53 | 37 | 43.53 | 62 | 72.94 | 23 | 27.06 |
| 77. பொலன்னறுவ | 288 | 49 | 17.01 | 44 | 15.28 | 90 | 31.25 | 78 | 27.08 | 261 | 90.63 | 27 | 9.38 |
| 78. ஹிங்குரக் கொடை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 79. திம்புலாகல | 79 | 5 | 6.33 | 13 | 16.46 | 25 | 31.65 | 26 | 32.91 | 69 | 87.34 | 10 | 12.66 |
| 80. பதுளை | 684 | 51 | 7.46 | 73 | 10.67 | 216 | 31.58 | 196 | 28.65 | 536 | 78.36 | 148 | 21.64 |
| 81. பண்டாரவளை | 841 | 47 | 5.59 | 99 | 11.77 | 245 | 29.13 | 271 | 32.22 | 662 | 78.72 | 179 | 21.28 |
| 82. மஹியங்கனை | 6 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 16.67 | 1 | 16.67 | 5 | 83.33 |
| 83. வெலிமடை | 434 | 34 | 7.83 | 56 | 12.90 | 134 | 30.88 | 142 | 32.72 | 366 | 84.33 | 68 | 15.67 |
| 84. பசறை | 373 | 12 | 3.22 | 32 | 8.58 | 109 | 29.22 | 127 | 34.05 | 280 | 75.07 | 93 | 24.93 |
| 85. மொனராகலை | 121 | 6 | 4.96 | 7 | 5.79 | 21 | 17.36 | 47 | 38.84 | 81 | 66.94 | 40 | 33.06 |
| 86. வெல்லவாய | 11 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 18.18 | 2 | 18.18 | 9 | 81.82 |
| 87. பிபிலை | 90 | 4 | 4.44 | 18 | 20.00 | 28 | 31.11 | 19 | 21.11 | 69 | 76.67 | 21 | 23.33 |
| 88. இரத்தினபுரி | 375 | 11 | 2.93 | 29 | 7.73 | 75 | 20.00 | 130 | 34.67 | 245 | 65.33 | 130 | 34.67 |
| 89. பலாங்கொடை | 259 | 13 | 5.02 | 26 | 10.04 | 55 | 21.24 | 89 | 34.36 | 183 | 70.66 | 76 | 29.34 |
| 90. நிவித்திகல | 116 | 1 | 0.86 | 5 | 4.31 | 18 | 15.52 | 35 | 30.17 | 59 | 50.86 | 57 | 49.14 |
| 91. எம்பிலிபிடிய | 236 | 8 | 3.39 | 15 | 6.36 | 46 | 19.49 | 81 | 34.32 | 150 | 63.56 | 86 | 36.44 |
| 92. கேகாலை | 193 | 11 | 5.70 | 19 | 9.84 | 50 | 25.91 | 61 | 31.61 | 141 | 73.06 | 52 | 26.94 |
| 93. மாவனல்லை | 773 | 50 | 6.47 | 113 | 14.62 | 241 | 31.18 | 204 | 26.39 | 608 | 78.65 | 165 | 21.35 |
| 94. தெஹிஓவிட்ட | 527 | 26 | 4.93 | 50 | 9.49 | 165 | 31.31 | 160 | 30.36 | 401 | 76.09 | 126 | 23.91 |
| மொத்தம் | **60149** | **5400** | **8.98** | **8599** | **14.30** | **16721** | **27.80** | **16319** | **27.13** | **47039** | **78.20** | **13110** | **21.80** |

**அட்டவணை 4**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 6 | 0.01 | 82813 | 100.00 |
| 81 - 90 | 997 | 1.20 | 82807 | 99.99 |
| 71 - 80 | 5239 | 6.33 | 81810 | 98.79 |
| 61 - 70 | 10234 | 12.36 | 76571 | 92.46 |
| 51 - 60 | 15213 | 18.37 | 66337 | 80.10 |
| 41 - 50 | 17388 | 21.00 | 51124 | 61.73 |
| 31 - 40 | 16368 | 19.77 | 33736 | 40.74 |
| 21 - 30 | 11054 | 13.35 | 17368 | 20.97 |
| 11 - 20 | 5217 | 6.30 | 6314 | 7.62 |
| 01 - 10 | 1090 | 1.32 | 1097 | 1.32 |
| 00 - 00 | 7 | 0.01 | 7 | 0.01 |

**அட்டவணை 5**

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

உ-ம் : இப்பாடத்தில் 71-80 இற்கும் இடைப்பட்ட வகுப்பாயிடையில் 5239 மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது 6.33% ஆகும். 19.77% த்தினர் அதாவது 16 368 பேர் 31-40 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் 1 இல் பெறப்பட்டுள்ள அடைவு

க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2011
22 - தமிழ்மொழியும் இலக்கியமும் - வினாப்பத்திரம் I
வினாக்களுக்குச் சரியாக விடையளிக்கப்பட்டுள்ள விதம்




**வரைபு** 1 இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - மேலே உள்ள வரைபின்படி 22ஆம் வினாவுக்குச் சரியான விடையளித்தோர் 18% ஆகும். 34ஆம் வினாவுக்குச் சரியான விடையளித்தோர் 91% ஆகும். இதற்கேற்ப 22ஆம் வினா இலகுத்தன்மை குறைந்ததாகவும் (கடினமானதாகவும்) 3, 6, 15, 17, 34 ஆம் வினாக்கள் இலகுத்தன்மை கூடியனவாகவும் கருதலாம்.

### 1.3.2 வினாப்பத்திரம் II வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்.




இது RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் - வினாப்பத்திரம் II இன் 1-5 வரையான வினாக்கள் கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டிய வினாக்களாகும். எனினும் முதலாம் வினாவை 98% ஆனோரே தெரிவு செய்துள்ளனர். 5ம் வினாவை 97% ஆனோரே தெரிவு செய்துள்ளனர்.

**வரைபு 2** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது)

### 1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் -

1ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும்.
புள்ளி வீச்சு 00-25% இற்கிடையில் (0-5புள்ளிகள்) 18% த்தினரும், புள்ளி வீச்சு 26-50% இற்கிடையில் (6-10 புள்ளிகள்) 42% த்தினரும், புள்ளி வீச்சு 51-75% இற்கிடையில் (11-15 புள்ளிகள்) 32%த்தினரும், புள்ளி வீச்சு 76-100% இற்கிடையில் (16-20 புள்ளிகள்) 8% த்தினரும் பெற்றுள்ளனர்.

**வரைபு 3** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு

**க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2011**
**22 - தமிழ்மொழியும் இலக்கியமும் - வினாப்பத்திரம் II**
**இலகுச்சுட்டி**




**வரைபு 4** (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் :- வினா 1 இல் உபபிரிவு viii ஆம் வினா இலகுத்தன்மை வாய்ந்ததாகவும் அதே வினாவின் உபபிரிவு iii ஆம் வினா கடினத்தன்மையுடையதாகவும் காணப்படுகின்றன.

2 ஆம் வினாவில் உபபிரிவு (அ) இன் இலகுச்சுட்டி 37% ஆகவும் மற்றைய உபபிரிவுகள் (ஆ), (இ), (ஈ) ஆகியவற்றின் இலகுச்சுட்டி 15% இலும் குறைவாகவும் உள்ளது. இதன்படி பிரிவு 2 ஆம் வினாவில் உபபிரிவு (அ) ஏனைய உபபிரிவுகளை விட இலகுத்தன்மை வாய்ந்ததாக உள்ளது.

### 1.3.5 வினாப்பத்திரம் III - வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்




இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் - 1-4 வரையான வினாக்கள் கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டிய வினாக்களாகும். எனினும் முதலாம் வினாவை 99% ஆனவர்களே தெரிவு செய்துள்ளனர்.

**வரைபு 5** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.6 வினாப்பத்திரம் III இற்கு புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் -

4ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 15 ஆகும். புள்ளிவீச்சு 00-25% இற்கிடையில் (0-3 புள்ளிகள்) 34%த்தினரும், புள்ளிவீச்சு 26-50% இற்கிடையில் (4 - 7 புள்ளிகள்) 31%த்தினரும், புள்ளிவீச்சு 51-75% இற்கிடையில் (8-11 புள்ளிகள்) 24%த்தினரும், புள்ளிவீச்சு 76-100% இற்கிடையில் (12-15 புள்ளிகள்) 11% த்தினரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 6** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

## 1.3.7 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்ட அடைவு




**வரைபு 7** (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)
இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.
உதாரணம் :- வினா 1 இல் பிரிவு (viii) இற்கு சரியான விடை அளித்தோர் 61% ஆகும். வினா 1 இன் (x) ஆம் பிரிவிற்குச் சரியான விடையளித்தோர் 8% ஆகும். இதன்படி 1ஆம் வினாவின் (viii) ஆம் பிரிவு இலகுத்தன்மையுடையதாகவும் 1ஆம் வினாவின் (x) ஆம் பிரிவு கடினத்தன்மையுடையதாகவும் அமைந்துள்ளன.

# பகுதி II

## 2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாப்பத்திரம் I கட்டமைப்பு

- நேரம் :- 1 மணித்தியாலம், மொத்தம் 40 புள்ளிகள்
- இவ்வினாத்தாள் நான்கு விடைகளைக் கொண்ட 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. இவ் ஒவ்வொரு வினாக்களுக்கும் உரிய (1), (2), (3), (4) ஆகிய தெரிவுகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான தெரிவை தெரிவு செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- 1-20 வரையான வினாக்கள் பெரும்பாலும் மொழி வளத்தைக் கணிப்பிடுவதாகவும்,
- 21-30 வரையான வினாக்கள் இலக்கணத்திறனைக் கணிப்பிடுவதாகவும்,
- 31-40 வரையான வினாக்கள் கிரகித்தல், மொழி அமைப்பு, கலைச்சொல் அறிவு, பந்தியாக்கம் போன்ற திறன்களை மதிப்பிடுவதாகவும் அமைந்துள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் விடைகள் எதிர்பார்க்கப்படுகின்றன
- இவ்வினாப்பத்திரம் மாணவர்களுக்கு இலகுவாக விடையளிக்கும் விதத்தில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2.1.2 வினாப்பத்திரம் I

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. 'வேயின் திரண்ட தோள் வேல் கண்ணாய்' - இங்கு **வேய்** என்பதன் பொருள்
   (1) மலை (2) மூங்கில் (3) வேய்தல் (4) பனை

2. 'அரசிளங்குமரன் வேட்டையாட வேங்கையும் வேழமும் அகப்படாமையால் அலக்கணுற்றான்' - **வேங்கையும் வேழமும்** என்பன முறையே
   (1) யானையும் புலியும் (2) புலியும் சிங்கமும்
   (3) புலியும் யானையும் (4) சிங்கமும் புலியும்

3. 'உற்றுழித் தீர்வார் உறவு அல்லார்' - **உறவு** என்பதன் எதிர்ப்பொருட் சொல்
   (1) தோழமை (2) அடிமை (3) தீது (4) பகை

4. ரோஹினியின் நிஷ்களங்க நெஞ்சத்தில் பரவசநிலை பிறந்தது - **நிஷ்களங்கம்** என்பதன் எதிர்ப்பொருட் சொல்
   (1) களங்கம் (2) கலக்கம் (3) மங்கலம் (4) கழுங்கு

5. பாணன் பாடிப் பரிசு பெற்று வந்தான் - **பாணன்** என்பதன் பெண்பாற் சொல்
   (1) பாங்கி (2) பாடினி (3) பாடகி (4) பாலகி

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. அரண்மனையில் பிற ஆடவரை அனுமதிக்காது அரசகுலப் பெண்கள் வசிப்பதற்கெனவுள்ள தனிப்பகுதி
   (1) மாடம் (2) சாளரம் (3) உப்பரிகை (4) அந்தப்புரம்

7. மாவின் இளம் பிஞ்சு வடு, பனையின் இளங்காய்
   (1) குரும்பை (2) வடலி (3) நுங்கு (4) கச்சல்

8. இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இவ்வருடம் அதன் வைரவிழாவைக் கொண்டாடியது. வைரவிழா என்பது
   (1) 50 ஆண்டு நிறைவு விழா (2) 60 ஆண்டு நிறைவு விழா
   (3) 25 ஆண்டு நிறைவு விழா (4) 75 ஆண்டு நிறைவு விழா

9. சிங்கம், வண்டு, திருமால் என்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
   (1) அரி (2) கரி (3) அளி (4) ஆளி

10. மகிழ்ச்சி, உவகை, உவப்பு என்ற சொற்கள் தரும் பொருள்
    (1) கழிப்பு (2) வனப்பு (3) முறுவல் (4) களிப்பு

11. இளமைப் பருவத்தைக் குறிக்க மிகப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
    (1) உணர்வொழிகாலம் (2) குறுகுறு நடந்து குதலை மொழியும் காலம்
    (3) துள்ளித்திரிகின்ற காலம் (4) நரை திரை மூப்புறு காலம்

12. தங்கம்மா தனது மகன் அலுவலகமொன்றில் 'கிளார்க்' (clerk) ஆக வேண்டுமெனக் கனவு கண்டாள். கிளார்க் என்ற சொல்லின் தமிழ்ச் சொல்
    (1) முகாமையாளன் (2) எழுத்தாளன்
    (3) ஊழியன் (4) எழுதுவினைஞன்

13. ஆடுகளின் கூட்டம் மந்தை; மயில்களின் கூட்டம்
    (1) குழாம் (2) அணி
    (3) கலாபம் (4) குவியல்

14. நிறுத்தக்குறிகளில் அரைப்புள்ளி அல்லது தொடரிசைக்குறி எனப்படுவது
    (1) , (2) ;
    (3) : (4) !

15. கையும் மெய்யுமாக பிடிபட்ட திருடன் பொலிசாரிடம் ஏதோ உளறினான். உளறுதல் என்பதன் கருத்து
   (1) பொருளின்றிப் பிதற்றுதல்   (2) விளக்கமாகச் சொல்லுதல்
   (3) இரந்து பேசுதல்   (4) கடிந்து சொல்லுதல்

● **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. 'மதில் சுவரை நான் தாண்டியதே பகீரதப் பிரயத்தனம்' என்றார் குமாரப் புலவர். பகீரதப் பிரயத்தனம் என்ற மரபுத் தொடரின் பொருள்
   (1) வீண்பாடுபடுதல்   (2) நிலைகுலைதல்
   (3) விடாமுயற்சி செய்தல்   (4) விரைந்து பாய்தல்

17. 'உம்மோடு வெட்டிப்பேச்சு பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை.' - வெட்டிப்பேச்சு என்ற மரபுத் தொடரின் கருத்து
   (1) விவாதம் செய்தல்   (2) மறுத்துப் பேசுதல்
   (3) நீண்ட பேச்சு   (4) வீண் பேச்சு

18. தூய்மையானவரிடத்து கபடமான எண்ணமிருக்காது என்ற கருத்தைத் தரும் பழமொழி
   (1) மனமுண்டானால் இடமுண்டு   (2) வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை
   (3) நிறைகுடம் தளும்பாது   (4) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

19. மகனை இழந்த தாய் மனம் உருகுவதற்குப் பொருத்தமான உவமைத் தொடர்
   (1) அகலாது அணுகாது தீக்காய்வர் போல்   (2) ஏறாமடைக்கு நீர் பாய்ச்சினாற்போல
   (3) வலையிற் சிக்கிய மான்போல   (4) அக்கினியிற்பட்ட மெழுகுபோல

20. 'ஆறின கஞ்சி பழங் கஞ்சி' என்ற பழமொழி தரும் உட்கருத்து
   (1) கஞ்சி ஆறிவிட்டால் பழையதாகி விடும்.
   (2) ஆறிப் பழையதான கஞ்சியை யாரும் விரும்பார்.
   (3) எக்காரியத்தையும் பிற்போடக் கூடாது.
   (4) கிடைத்த சந்தர்ப்பம் மீண்டும் வராது.

● **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. புளியங்காய் என்பதில் இடம்பெற்றுள்ள அம் என்பது
   (1) சந்தி   (2) சாரியை   (3) விகுதி   (4) விகாரம்

22. படிக்கட்டுகளில் ஏறி மலைக்கோயிலுக்குச் சென்றான். இங்கே மலைக்கோயில் என்பது
   (1) மூன்றாம் வேற்றுமைத் தொகை   (2) ஐந்தாம் வேற்றுமைத் தொகை
   (3) ஆறாம் வேற்றுமைத் தொகை   (4) ஏழாம் வேற்றுமைத் தொகை

23. பின்வருவனவற்றுள் பெயரும் பெயரும் சேர்ந்த கூட்டுப் பெயருக்கு உதாரணம்
   (1) கண்காட்சி   (2) எறிகணை
   (3) எழுதுகோல்   (4) புத்திசாலி

24. அறிவாளி என்ற ஆக்கப்பெயரின் விகுதி
   (1) வாளி   (2) ளி
   (3) அறிவு   (4) ஆளி

25. பின்வருவனவற்றுள் எழுவாய் தொக்கு நிற்கும் வாக்கியம்
   (1) நாளை வா   (2) காற்று வீசியது.
   (3) வந்தான் சீசர்   (4) அவன் வந்தானா ?

26. 'கார், நீர், மோர் என்று முப்பேரும் பெற்றாயே' இங்கு முப்பேர் என்பதைப் பிரித்தால்
   (1) முன் + பேர்   (2) முற் + பேர்
   (3) மூன்று + பேர்   (4) மூப்பு + பேர்

27. 'மாலை முன்றில் குறுங்கால் கட்டில் மனையோள் துணைவி' இங்கு முன்றில் என்பது

(1) இலக்கணப்போலி (2) இலக்கணமுடையது
(3) எழுத்துப்போலி (4) மரூஉ

28. புணர்ச்சியில் உடம்படுமெய் **தோன்றாத** இடம்

(1) தீயை (2) மாவிலை
(3) பனையோலை (4) மரவேர்

29. பின்வரும் வாக்கியங்களுள் வேறுபட்ட கருத்தினைத் தரும் வாக்கியம் எது ?

(1) நீ அல்லது நான் இதனைச் செய்ய வேண்டும்.
(2) நீயாவது நானாவது இதனைச் செய்ய வேண்டும்.
(3) நீயும் நானும் இதனைச் செய்ய வேண்டும்.
(4) நீயேனும் நானேனும் இதனைச் செய்ய வேண்டும்.

30. மலர் கொய்வோனைக் கண்டேன். - கொய்வோனை என்பது

(1) தொழில் பெயர் (2) சினைப் பெயர்
(3) வினைமுற்று (4) வினையாலணையும் பெயர்

● பின்வரும் பந்திகளின் **பிரதான கருத்தைத்** தெரிவு செய்க.

31. வாழ்வுக்கு இனிமை தருவது அன்பு. இயங்குகின்ற இயந்திரத்துக்கு எண்ணெய் போட்டால் அது தடங்கல் இன்றி இயங்குகின்றது. அந்த எண்ணெய்க்கு நிகரானது அன்பு. அன்புடையவர்களே எங்கு சென்றாலும் வாழ்வை நன்கு செலுத்துபவர் ஆகின்றனர்.

(1) அன்பின் இனிமையை பலர் அறிவதில்லை.
(2) இயந்திரமொன்றை இயங்க வைப்பது எண்ணெய் ஆகும்.
(3) இயந்திரத்திற்கு இடப்படும் எண்ணெய் போன்றது அன்பு.
(4) அன்புடையவர்களே வாழ்க்கையை நன்கு நடத்துபவர் ஆவர்.

32. இன்று உலகில் மூவாயிரத்துக்குமேற்பட்ட மொழிகளை மக்கள் பேசுகின்றனர். இவற்றுள் காலப் பழமையும் இலக்கிய வளமும் பெற்றுள்ள மொழிகள் ஆறு. அவை கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், வடமொழி, சீனம், தமிழ் என மொழி ஆய்வாளர் கூறுவர். இவற்றுள் நூல் வழக்கிலன்றி உலகவழக்கிலும் தளர்ச்சியின்றி நடைபெற்று வருவது நம் தாய்மொழியாகிய தமிழாகும்.

(1) உலகில் மக்கள் பேசும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகளுள் தமிழும் ஒன்றாகும்.
(2) உலகில் பேசப்படும் மொழிகளுள் பழமையும் இலக்கிய வளமும் உள்ள மொழிகள் ஆறாகும்.
(3) தொன்மையான மொழிகள் ஆறினுள் தமிழ்மொழியே இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் இன்றும் பயின்று வருகின்றது.
(4) உலகில் பேசப்படும் மொழிகள் பற்றி ஆய்வாளர் பலர் ஆய்வு செய்து கொண்டே இருக்கின்றனர்.

● பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான **முடிக்கும் பகுதியைத்** தெரிவு செய்க.

33. கவரிமான்கள் உயிர் நீப்பின் கணப்பொழுதும்

(1) உயிர் வாழாது. (2) உயிர் வாழ மாட்டாது.
(3) உயிர் வாழா. (4) உயிர் வாழும்.

34. நகைச்சுவைக் காட்சியைத் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த கலைவாணன்

(1) படபடவென்று சிரித்தான். (2) கலகலவென்று சிரித்தான்.
(3) கடகடவென்று சிரித்தான். (4) குளுகுளுவென்று சிரித்தான்.

35. ஒவ்வொரு

(1) பாடலும் ஒவ்வோர் உண்மையைக் கூறுகின்றது.
(2) பாடலும் ஒவ்வோர் உண்மைகளைக் கூறுகின்றன.
(3) பாடல்களும் ஒவ்வோர் உண்மைகளைக் கூறுகின்றன.
(4) பாடல்களும் ஒவ்வோர் உண்மைகளைக் கூறுகின்றது.

● பின்வருவனவற்றுள் **எழுத்துத்துப் பிழையற்ற** வாக்கியத்தைத் தெரிவு செய்க.

36. (1) இந்நாட்டின் முதுகெலும்பாக விழங்குபவர்கள் உளவர்களாவர்.
(2) பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது.
(3) நவநீதன் ஒழிவுமறைவின்றி எந்த விடையத்தையும் வெளிப்படையாகப் பேசுபவன்.
(4) அங்கத்தவர்கள் எல்லோரும் கூட்டத்திற்கு சமூகமழித்திருந்தார்கள்.

● **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37. உள்ளூராட்சித் தேர்தலில் சுயேச்சையாக பல .................................... போட்டியிடுகின்றனர்.

(1) கண்காணிப்பாளர்கள் (2) உறுப்பினர்கள்
(3) வேட்பாளர்கள் (4) வாக்காளர்கள்

38. உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட எனது நண்பன் மிகக் குறைந்த வாக்குகளையே எடுத்ததால் தனது .................................... இழந்தான்.

(1) சேமிப்புப் பணத்தை (2) கட்டுப் பணத்தை
(3) முற்பணத்தை (4) சந்தாப் பணத்தை

39. அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆணைக்குழு செய்த .................................... அரசாங்கத்தினால் பரிசீலனை செய்யப்படுகிறது.

(1) ஆய்வுரை (2) பரிந்துரை (3) மதிப்புரை (4) அணிந்துரை

● **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40. (அ) தலைச் சங்கத்தின் அழிவோடு அரசரும் புலவரும் வளாதிருந்துவிடவில்லை.
(ஆ) கடல்கோளுக்குப் பின் கபாடபுரத்தில் இடைச்சங்கம் தொடர்ந்தது.
(இ) இடைச்சங்கத்தின் காலம் மூவாயிரத்தெழுநூறாண்டாகும்.
(ஈ) தலைச்சங்கம் கடல்கோளினால் அழிந்தது.
(உ) இடைச்சங்கம் தலைச்சங்கத்தின் மாதிரியாகவே அமைக்கப்பட்டது.

(1) அ, இ, ஆ, ஈ, உ (2) ஆ, இ, உ, ஈ, அ
(3) ஈ, அ, ஆ, உ, இ (4) உ, ஆ, இ, அ, ஈ

## 2.1.3 எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

### வினாப்பத்திரம் I புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01 | 2 | 21 | 2 |
| 02 | 3 | 22 | 4 |
| 03 | 4 | 23 | 1 |
| 04 | 1 | 24 | 4 |
| 05 | 2 | 25 | 1 |
| 06 | 4 | 26 | 3 |
| 07 | 3 | 27 | 1 |
| 08 | 2 | 28 | 4 |
| 09 | 1 | 29 | 3 |
| 10 | 4 | 30 | 4 |
| 11 | 3 | 31 | 4 |
| 12 | 4 | 32 | 3 |
| 13 | 1 | 33 | 3 |
| 14 | 2 | 34 | 2 |
| 15 | 1 | 35 | 1 |
| 16 | 3 | 36 | 2 |
| 17 | 4 | 37 | 3 |
| 18 | 2 | 38 | 2 |
| 19 | 4 | 39 | 2 |
| 20 | 3 | 40 | 3 |

**ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் (1 x 40) = 40 புள்ளிகள்**

## 2.1.4 வினாப்பத்திரம் 1 இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும்

✶ வரைபு 1 இலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.




| வினா இல. | தொனிப்பொருள் | இலகுத்தன்மை கூடிய வினாவும் அதன் இலகுத்தன்மையும் | இலகுத்தன்மை குறைந்த வினாவும் அதன் இலகுத்தன்மையும் |
|---|---|---|---|
| 1 - 20 | மொழி வளத்தைக் கணிப்பிடல் | 6, 17 (85%) | 12 (33%) |
| 21 - 30 | இலக்கணத் திறன் | 24, 26 (65%) | 22 (33%) |
| 31 - 40 | கிரகித்தல், மொழியமைப்பு, கலைச்சொல் அறிவு, பந்தியாக்கம் | 34 (91%) | 33 (33%) |

மாணவர்களுக்குப் பொருத்தமான வினாப்பத்திரமாக அமைந்திருந்த போதிலும் பெரும்பாலான வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தெரிவு செய்திருந்தவர்கள் 50% இற்கும் குறைவான பரீட்சார்த்திகளே. இவ்வினாத்தாளில் 1-20 வரையான வினாக்கள் மொழிவளத்தைக் கணிப்பிடுவதாக அமைந்துள்ளன. இதில் இலகுத்தன்மை கூடிய வினாக்களாக 6ஆம் 17ஆம் வினாக்கள் அமைந்துள்ளன. இவ்வினாக்களுக்கு 85% இற்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். பரீட்சார்த்திகளுக்குப் பரிச்சயமான வினாக்களாக இவை அமைந்திருந்தமை கூடிய அடைவு வீதத்துக்குக் காரணம் எனலாம். மொழிவளத்தைக் கணிப்பிடுகின்ற வினாக்களுள் வினா இலக்கம் 5, 10, 12 , 18 ஆகியவற்றிற்கு 45% இற்குக் குறைந்த பரீட்சார்த்திகளே சரியான விடையளித்துள்ளனர். இவ்வினாக்கள் பரீட்சார்த்திகளுக்குக் கடினத் தன்மை உடையனவாக அமைந்துள்ளன. எதிர்ப்பாற் சொற்கள் லகர, ளகர

வேறுபாடுகள், கலைச் சொற்கள், பழமொழிகளின் கருத்துக்கள், உட்கருத்துக்கள் என்பன பற்றிய போதிய அறிவின்மை இதற்குக் காரணமாக அமையலாம். எனவே மாணவர்களிடையே **மொழிவளம் பற்றிய அறிவை வளர்ப்பதற்குரிய உத்திகளைக் கண்டறிந்து** கற்பித்தலில் பிரயோகிப்பதும் போதிய பயிற்சிகளை வழங்குவதும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும்.

21-30 வரையான வினாக்கள் இலக்கணத்திறனைக் கணிப்பிடுவதாக அமைந்துள்ளன. இதில் இலகுத்தன்மை கூடிய வினாக்களாக 24ஆம், 26ஆம் வினாக்கள் அமைந்துள்ளன. இவ்வினாக்களுக்கு 65% ஆனோர் சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர். வினா இலக்கம் 22 இலகுதன்மை மிகவும் குறைந்த வினாவாக உள்ளது. எனவே மாணவர்களிடையே இலக்கணத் திறனை மேலும் மேம்படுத்துவதற்குரிய வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

31-40 வரையான வினாக்கள் கிரகித்தல், மொழியமைப்பு, கலைச்சொல் அறிவு, பந்தியாக்கம் போன்ற திறன்களைக் கணிப்பிடுவதாக அமைந்துள்ளன. இதில் வினா இலக்கம் 34 இலகுத்தன்மை உடையதாகக் காணப்படுகின்றது. 91% ஆன பரீட்சார்த்திகள் இதற்குச் சரியான விடையளித்துள்ளனர். வினா இலக்கம் 33 கடினத்தன்மையுடையதாகக் காணப்படுகிறது. 23% ஆனோர் மட்டுமே இதற்குச் சரியான விடைளித்துள்ளனர். இவற்றுடன் 35,36,39 ஆம் வினாக்களுக்கு 50% இற்குக் குறைவானவர்களே சரியான விடையளித்துள்ளனர். எனவே மொழிவளம், கிரகித்தல், மொழியமைப்பு, கலைச்சொல் அறிவு, பந்தியாக்கம் போன்றவற்றை தனித்தனியாகவும் ஒன்றாகவும் கட்டியெழுப்புவதற்குரிய பொருத்தமான, புதிய உத்திகளைக் கையாண்டு கற்றல் வீதத்தைக் கூட்டுவதன் மூலம் அடைவுமட்டத்தை அதிகரிக்கச் செய்தல் எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.1.5 வினாப்பத்திரம் I இல் ஒவ்வொரு வினாவுக்கும் மாணவர்கள் தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்)

| வினா இலக்கம் | சரியான தெரிவு | தெரிவு செய்யப்பட்ட தெரிவின் வீதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | 2 | 13% | 76% | 8% | 3% |
| 2 | 3 | 6% | 16% | 58% | 20% |
| 3 | 4 | 9% | 4% | 6% | 81% |
| 4 | 1 | 47% | 22% | 29% | 2% |
| 5 | 2 | 30% | 36% | 23% | 11% |
| 6 | 4 | 4% | 4% | 6% | 86% |
| 7 | 3 | 5% | 24% | 68% | 3% |
| 8 | 2 | 16% | 45% | 13% | 26% |
| 9 | 1 | 68% | 11% | 12% | 9% |
| 10 | 4 | 21% | 23% | 13% | 43% |
| 11 | 3 | 10% | 10% | 78% | 2% |
| 12 | 4 | 25% | 29% | 13% | 33% |
| 13 | 1 | 44% | 11% | 32% | 13% |
| 14 | 2 | 29% | 50% | 13% | 8% |
| 15 | 1 | 83% | 8% | 6% | 3% |
| 16 | 3 | 28% | 9% | 54% | 9% |
| 17 | 4 | 4% | 6% | 3% | 87% |
| 18 | 2 | 10% | 44% | 15% | 31% |
| 19 | 4 | 8% | 6% | 13% | 73% |
| 20 | 3 | 4% | 5% | 62% | 29% |
| 21 | 2 | 26% | 34% | 22% | 18% |
| 22 | 4 | 26% | 38% | 17% | 19% |
| 23 | 1 | 58% | 10% | 11% | 21% |
| 24 | 4 | 10% | 7% | 18% | 65% |
| 25 | 1 | 49% | 14% | 21% | 16% |
| 26 | 3 | 5% | 23% | 65% | 7% |
| 27 | 1 | 40% | 17% | 15% | 28% |
| 28 | 4 | 46% | 11% | 10% | 33% |
| 29 | 3 | 13% | 10% | 57% | 20% |
| 30 | 4 | 37% | 11% | 7% | 45% |
| 31 | 4 | 12% | 3% | 20% | 65% |
| 32 | 3 | 15% | 9% | 70% | 6% |
| 33 | 3 | 30% | 37% | 23% | 10% |
| 34 | 2 | 2% | 91% | 3% | 4% |
| 35 | 1 | 39% | 10% | 31% | 20% |
| 36 | 2 | 16% | 49% | 23% | 12% |
| 37 | 3 | 2% | 15% | 78% | 5% |
| 38 | 2 | 10% | 57% | 21% | 12% |
| 39 | 2 | 48% | 37% | 11% | 4% |
| 40 | 3 | 6% | 24% | 56% | 14% |

ஒவ்வொரு வினாவின் கீழும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

## 2.1.6 வினாப்பத்திரம் I இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் ஆலோசனைகளும்

★ வினா இலக்கம் 4 : (சரியான விடையளித்தோர் 46%)
வடமொழிச் சொற்கள் பற்றியும் அவை தமிழ் மொழியில் வழங்கப்படும்போது மாற்றம் பெறும் விதமான நற்சமம், தற்பவம் பற்றியும் மாணவர்களிடம் போதிய அறிவு, பொருள் விளங்காத்தன்மை என்பன காணப்படுகின்றது.
இயைபு மாறி வினவப்பட்டபோது மாணவர்கள் விடையினைப் புரிந்து கொள்ளாமை
(களங்கம் - நிஷ்களங்கம் - நிஷ்களங்கம் - .........)

★ வினா இலக்கம் 5 : (சரியான விடையளித்தோர் 36%)
பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயமின்மை
(பாணன் என்ற ஆண்பாற் சொல்லிற்கு பாடினி என்ற பெண்பாற் சொல்லை இனங்காண முடியாமை.

★ வினா இலக்கம் 10 : (சரியான விடையளித்தோர் 43%)
பல பொருள் ஒரு சொல் (திரிசொல்)பற்றிய அறிவு போதாமை

★ வினா இலக்கம் 12 : (சரியான விடையளித்தோர் 33%)
அன்றாட வாழ்வில் 'கிளார்க்' என்ற திசைச்சொல்லின் தமிழ் வடிவத்தின் உபயோகம் குறைவாகக் காணப்படுகின்றது.

★ வினா இலக்கம் 13 : (சரியான விடையளித்தோர் 44%)
மரபுச் சொற்கள் மருவி ஒலிக்கின்றமை

★ வினா இலக்கம் 18 : (சரியான விடையளித்தோர் 44%)
எண்ணத்திற்கும் அகத்திற்கும் இடையிலான தொடர்பு மாணவர்கள் தவறான விடையளிக்க தூண்டுகோலாயமைந்துள்ளது. ஆசிரியர்கள் இவ்விடத்தில் எதிர்மறையான வினாக்களுக்கு எதிர்மறை விடைகள் அமைவதை சுட்டிக்காட்டி விளக்க வேண்டும்.

★ வினா இலக்கம் 21 : (சரியான விடையளித்தோர் 34%)
சாரியைகளை உதாரணங்களுடன் ஆசிரியர் விளக்குதல் வேண்டும்.

★ வினா இலக்கம் 22 : (சரியான விடையளித்தோர் 19%)
வேற்றுமைகளை உருபு அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் விளக்குதல், 'இல்' உருபு ஐந்தாம் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் அமைவதைத் தெளிவுபடுத்தல்

★ வினா இலக்கம் 27 : (சரியான விடையளித்தோர் 40%)
இலக்கணப்போலிக்கும் மரூஉக்கும் இடையிலான வேறுபாட்டை மாணவர்கள் இனங்கண்டு கொள்ளவில்லை.

★ வினா இலக்கம் 28 : (சரியான விடையளித்தோர் 33%)
எதிர்மறையாக வினவப்படுவதை மாணவர்கள் கருத்திற்கொள்ளவில்லை.

★ வினா இலக்கம் 30 : (சரியான விடையளித்தோர் 45%)
வினைச்சொல் பெயர்த்தன்மைப்படுவதை மாணவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை.

★ வினா இலக்கம் 33 : (சரியான விடையளித்தோர் 23%)
மாணவர்கள் விகுதியடிப்படையில் ஒருமை, பன்மை ஆகியவற்றைப் புரிந்துகொள்ளவில்லை.

★ வினா இலக்கம் 35 : (சரியான விடையளித்தோர் 39%)
எண் வழு பற்றிய போதிய விளக்கமின்மை

## 2.2 வினாப்பத்திரம் II ற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாப்பத்திரம் II கட்டமைப்பு

- நேரம் :- 2 மணித்தியாலங்கள் (மொத்தப் புள்ளிகள் 80)
- இவ்வினாப்பத்திரம் 5 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1. குறுவிடை வினாக்கள் 10. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்
2. கட்டுரை எழுதுதல் 25 புள்ளிகள் வழிகாட்டற் குறிப்புகளுடனான **நான்கு** கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்
3. சுருக்கம் எழுதுதல் 10 புள்ளிகள்
4. கிரகித்தல் தொடர்பான வினாக்கள் 10 புள்ளிகள்
5. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல் 15 புள்ளிகள்

**வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+25+10+10+15**
**= 80 புள்ளிகள்**

## 2.2.2. வினாப்பத்திரம் II எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

**வினா இல. 1**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

**1.** *சுருக்கமான விடை எழுதுக.*

(i) *பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.*

*பெருந்தடங்கட்பிறைநுதல்*

(ii) *மாதவி நடனம் ஆடினாள் - இதனை செயப்பாட்டுவினை வாக்கியமாக எழுதுக.*

(iii) *உயர்ரக மலைநாட்டு முதல்தர தேயிலை இங்கு விற்பனைக்கு உண்டு - இந்த வாக்கியத்தைத் திருத்தமாக எழுதுக.*

(iv) *சூறாவளி வீசியது. அளப்பரிய சேதங்கள் ஏற்பட்டன. - இந்த இரண்டு வாக்கியங்களையும் இணைக்கப் பயன்படுத்தக்கூடிய சொல் எது ?*

*ஆயினும், அன்றி, அதனால், ஆனாலும், எனினும்*

(v) *அண்ணன் தம்பி வீட்டுக்குப் போனது எனக்குத் தெரியாது. - இதன் பொருள் மயக்கம் நீங்குமாறு பொருத்தமான இடத்தில் காற்புள்ளி இட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.*

(vi) *இடைவெளிகளை நிரப்பப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.*

*பரதன் ............ (ஆளி, ஆழி, ஆலி) ........... (சூழ், சூள், சூல்) உலகம் முழுவதும் ஆட்சிசெய்வானாக.*

(vii) *பின்வருவனவற்றுள் கருத்தில் வேறுபடும் தொடர் யாது ?*

*கிட்டத்தட்ட, கிட்டமுட்ட, திட்டவட்டமாக, ஏறத்தாழ, ஏறக்குறைய*

(viii) *பின்வருவனவற்றுள் எமது கருத்துக்களைப் பிறருக்கு வெளிப்படுத்த உதவும் **இரண்டு** திறன்கள் எவை ?*

*பேச்சு, எழுத்து, வாசிப்பு, கேட்டல்*

(ix) *பந்தியை விரித்தெழுதும்போது தவிர்க்கப்பட வேண்டியது எது ?*

*உதாரணம் காட்டல், மேற்கோள் காட்டல், முன்னுக்குப் பின் முரண்படக் காட்டல், காரணகாரியத் தொடர்பு காட்டல்*

(x) *கட்டுரையில் பொதிந்துள்ள பிரதான அம்சங்களைத் தொகுத்துக்கூறுவதும் எமது கருத்துக்களைத் தெரிவிப்பதுமான உறுப்பு பின்வருவனவற்றுள் எது ?*

*முகவுரை, தொடருரை (உடல்), முடிவுரை*

*(20 புள்ளிகள்)*

**1 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**
**வினா இல. 1**

(i) பெரும் + தடம் + கண் + பிறை + நுதல்

(ii) மாதவியால் நடனம் ஆடப்பட்டது./ நடனம் மாதவியால் ஆடப்பட்டது.

(iii) மலைநாட்டு உயர்ரக முதல்தர தேயிலை இங்கு விற்பனைக்கு உண்டு. (02 புள்ளிகள்)
மலைநாட்டு உயர்ரக / முதல்தர தேயிலை இங்கு விற்பனைக்கு உண்டு.
(01 புள்ளி மட்டும் வழங்குக.)

(iv) அதனால்

(v) அண்ணன், தம்பி வீட்டுக்குப் போனது எனக்குத் தெரியாது.

(vi) ஆழி, சூழ்

(vii) திட்டவட்டமாக

(viii) பேச்சு, எழுத்து

(ix) முன்னுக்குப் பின் முரண்படக் காட்டல்

(x) முடிவுரை

(2 × 10 = 20 புள்ளிகள்)

**1ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




முதலாம் வினா கட்டாயம் விடையளிக்க வேண்டிய வினாவாக அமைந்தாலும் 98% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

16-20 வரையான பரம்பலில் 8% த்தினரும்
11-15 வரையான பரம்பலில் 32% த்தினரும்
06-10 வரையான பரம்பலில் 42% த்தினரும்
00-05 வரையான பரம்பலில் 18% த்தினரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 8% த்தினரே 16 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 18% ஆனோர் 5 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இல் 1 ஆம் வினாவானது 10 குறுவினாக்களைக் கொண்டது. அவற்றில் வினாக்கள் iv,viii என்பன இலகுத்தன்மையுடையனவாகவும் வினாக்கள் i, iii என்பன கடினத்தன்மையுடையனவாகவும் அமைந்துள்ளன.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- பொருள் தரும் விதத்தில் தொடரைச் சரியாகப் பிரித்து எழுதாமை (வினா i)
- வாக்கியத்தை திருத்தமாக எழுதாமை (வினா iii)
- கட்டுரையின் அமைப்பைச் சரியாக விளங்கிக் கொள்ளாமை (வினா x)

**பெறுபேற்றை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- தொடர்களை சொற்புணர்ச்சிக்கேற்ப பொருள்தரும் விதத்தில் பிரித்து எழுதுவதற்குரிய பயிற்சிகள் வழங்குதல்
- வாக்கியத்தைத் திருத்தமாக எழுதுவதற்குரிய பயிற்சிகளை வழங்குதல்
- கட்டுரையானது முகவுரை, தொடருரை, முடிவுரை என்றவாறு அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தல்

**வினா இலக்கம் i**

இவ்வினாவிற்கு 11% ஆனவர்களே சரியாக விடையளித்துள்ளனர்.

குறைபாடு : 1. சொற்புணர்ச்சியை இனங்கண்டு சந்திபிரிப்பதற்கு இயலாமை.
2. விடை தொடராக அமைவதால் ஒரு சொல்லில் ஏற்படும் தவறு, முழுமையான புள்ளிகளை இழக்கச் செய்கிறது.

ஆலோசனை : 1. பாவோதல் கணிப்பீடுகளை நடாத்துதல்
2. பாடப்பரப்பிற்குள்ளும் பாடப்பரப்பிற்கு அப்பாலும் பயிற்சிகளைக் கொடுத்தல்.

**வினா இலக்கம் (ii)**

இவ்வினாவிற்கு 47% ஆனவர்களே சரியாக விடையளித்துள்ளனர்.

குறைபாடு : 1. செயப்படுபொருளை எழுவாயாக மாற்றுவதில் இடர்பாடு

ஆலோசனை : 1. செய்வினையை செயப்பாட்டு வினையாக மாற்றும்போது செயப்படுபொருளை எழுவாயாக மாற்ற வேண்டும்.
2. எழுவாய் “ஆல்” உருபு ஏற்கும் போது வினை “படு” விகுதி பெறும்.
மாதவி நடனம் ஆடினாள். (செய்வினை)
மாதவியால் நடனம் ஆடப்பட்டது (செயப்பாட்டு வினை)

**வினா இலக்கம் (iii)**

இவ்வினாவிற்கு 6% ஆனவர்களே சரியாக விடையளித்துள்ளனர்.

குறைபாடு : அடைமொழியானது இடத்தைக் குறிப்பிடுகின்றதா? அல்லது அங்கு உற்பத்தி செய்யப்படும் உற்பத்தியைக் குறிப்பிடுகின்றதா? என வினா மயக்கமானதாக காணப்படுகின்றது.

ஆலோசனை : ‘ரகம்’ என்பது இடங்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தல்.

**வினா இலக்கங்கள் (iv), (vi), (vii), (viii), (ix), (x)** ஆகிய வினாக்களுக்கான விடைத் தெரிவுகளும் இணைக்கப்பட்டுள்ளதனால் இலகுவாக விடையளித்துள்ளனர்.

குறைபாடு : தரப்பட்டுள்ள விடைகளில் சரியானதை மட்டும் தெரிவுசெய்து எழுத வேண்டும். ஏனையவற்றுள் ஏதேனுமொன்றையாவது மேலதிகமாக எழுதினால் மொத்தப் புள்ளிகளையும் இழக்க நேரிடும்.

ஆலோசனை : மிகச் சரியான விடைகளை மாத்திரம் தெரிவுசெய்து எழுத வேண்டும். அப்போதுதான் பிழை ஏற்பட்டாலும் அரைவாசிப் புள்ளிகளையாவது பெற முடியும்.

**வினா இலக்கம் x**

இவ்வினாவிற்கு 30% மாணவர்களே சரியாக விடையளித்துள்ளனர்.

குறைபாடு : வினாவில் வந்துள்ள ‘தொகுத்துக் கூறல்” என்பதன் பொருளை விளங்காமை

ஆலோசனை : கட்டுரை எழுதும் போது சட்டகம் அமைத்து எழுதும் பழக்கத்தை ஏற்படுத்தல்

வினா இல. 2

**2.** *பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ* **250** *சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.*

(அ) *இயற்கை அன்னை நமக்களித்த பரிசு பூமி. அது எம்மைத் தாங்குகிறது. வாழவழி செய்கிறது. நீர் தருகிறது. தாவரங்கள் வளர உதவுகிறது. உணவுக் சங்கிலி, உணவு வலை என்பவற்றைப் பேணி நாம் வாழ வழிவகுக்கின்றது. எனவே நாம் அதனைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. பூமியின் இயற்கைத் தன்மையைப் பேணி அதிலிருந்து அதிக நன்மைகளைப் பெற முயற்சித்தல் வேண்டுமென்பதை வலியுறுத்தும் வகையில் ஒரு* ***விளக்கக் கட்டுரை.***

(ஆ) *இன்று விண்வெளி பற்றிய அறிவு பெருகி வருகிறது. அதற்கான பயணங்களும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. செவ்வாய்க் கிரகம் பற்றிய ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன. பறக்கும் தட்டுகள் விண்வெளிக்கலங்கள், மிதக்கும் ஆய்வு கூடங்கள் பற்றி இன்று பேசப்படுகின்றன. இவ்வாறான விண்வெளி ஆய்வுகளால் நன்மைகள் உண்டு எனக் கூறும் ஒருவருக்கும் தீமைகள் உண்டு என மறுக்கும் மற்றொருவருக்குமிடையில் இடம்பெறும்* ***உரையாடல்.***

(இ) *இன்று நமது நாட்டில் வீதி விபத்து என்பது சர்வ சாதாரணமாகி விட்டது. ஊடகச் செய்திகளில் இவை முக்கிய இடம் வகிக்கின்றன. வீதி அபிவிருத்தியின் போதாமை இதற்கு ஒரு காரணமாகும். அதே வேளை வாகனச் சாரதிகளும் பாதசாரிகளும் வீதி ஒழுங்குகளையும் விதிகளையும் கடைப்பிடிக்காமையும் காரணமாகும். வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு* ***விவரணக் கட்டுரை***

(ஈ) *அதிக இலாபம் ஈட்டும் பெரிய வணிக நிறுவனமொன்றின் தலைவராக இருக்கின்ற தந்தையொருவர் தனது மகனையும் அத்துறையிலே ஈடுபடுத்த விரும்புகிறார். மகனோ இசைக் கலைஞனாக வர விரும்புகின்றான். தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள கருத்து முரண்பாட்டை வெளிக்கொணரும் வகையில் ஒரு* ***சிறுகதை.***

*(25 புள்ளிகள்)*

**2 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(அ) **விளக்கக் கட்டுரை**

**அறிமுகம்**

- எமக்கு வாழ்வளிப்பது பூமி
  நீர் அதிகம் - பூமி சிறிது.

**தொடருரை :**

- பூமி எமக்களிக்கும் நன்மைகள் :-
  நீர்நிலைகள், தாவரங்கள், உயிரினங்கள், கனிப்பொருட்கள், எண்ணெய் வளம், காடுகள் போன்றன.
- மனிதன் அதிகம் பயன்பெற்றும் பூமியின் சமநிலையைப் பேணத் தவறியமை.
- துஷ்பிரயோகம் செய்தல்.
  அபிவிருத்திக்காக நிலத்தை அகழ்தல், வளங்களை மிகையாகப் பயன்படுத்தல் (விரயம்), காடழிப்பு, கடற்பாறைகள் அழிப்பு, தொழிற்சாலைக் கழிவுகள், நிலம்-நீர் மாசடைதல், மண்ணரிப்பு, செயற்கை உரப்பாவனை, ஆயுதப் பரிசோதனைகள் போன்றவை
- பூமியின் இயற்கைத் தன்மையைப் பேணல்.
  சட்ட நடவடிக்கைகள் - (காடழிப்பு, மண் அகழ்தல்)
  வீண் விரயங்களைத் தடுத்தல் (நீர், மரம்)
  மரநடுகைத் திட்டங்கள்
  விழிப்புணர்வுக்குரிய திட்டங்கள்
  பாவனைகளைக் கட்டுப்படுத்தல்

**முடிவுரை :**

- தொகுத்து எழுதுதல், சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தல்

(ஆ) **உரையாடல்**

- இருவருக்கிடையிலான உரையாடல் பாங்கில் அமைந்திருத்தல்.
- பேச்சு மொழியிலும் உரையாடல் அமையலாம்.
- சிறுசிறு வாக்கியங்களாகவும், உரையாடலுக்கிடையில் தொடர்பும் காணப்படல்.
- பிரதான விடயத்துடன் உரையாடல் தொடர்புபட்டிருத்தல்
- நன்மைகளையும் தீமைகளையும் விவாதித்து நிறுவும் பாங்கில் அமைதல்

**ஊடகங்களில் வந்த ஒரு செய்தியை மையப்படுத்தி உரையாடலை ஆரம்பிக்கலாம்./ வேறொரு வகையிலும் ஆரம்பிக்கலாம்.**

**விண்வெளி ஆய்வுகளால் ஏற்படும் நன்மைகள்**

- செய்மதித் தொடர்பாடல்
- அறிவுப் பெருக்கம் - புதிய ஆய்வுகள் (செவ்வாய்)
- புதிய கண்டுபிடிப்புக்கள் (கிரகங்கள்)
- விண்வெளி நிலையங்கள் (சீனா)
- மனித சாதனைகள் அர்ப்பணிப்பில் தங்கியிருத்தல்
- போட்டியின் மத்தியிலும் புதியன படைத்தல்
- செய்மதி மூலம் தகவல்கள்

**தீமைகள்**

- விண்வெளி மாசடைதல்
- இரகசியங்கள் வெளியாகி நாடுகளுக்கிடையில் முரண்பாடு.
- வல்லாதிக்கப் போட்டிகளும், போர்களும்
- வீண் விரயங்கள்
- விபத்துக்களும், உயிர் ஆபத்துக்களும்
- பெரும் நிதி செலவிடப்படல்

(இ) **விவரணக் கட்டுரை ....**

**ஆரம்பம்**

- வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமையை ஊடகங்கள் மூலம் அறிந்ததை வெளிப்படுத்தல். / வேறொரு வகையில் சுவாரஸ்யமாக ஆரம்பித்தல்.

**வீதி விபத்துக்களால் ஏற்படும் பாதக நிலைமைகள்**

- உயிரிழப்புக்கள், காயம், சீவியகால ஊனம், அரச செலவுகள், வாகனச் சேதம், பொருட் செலவு குடும்பங்கள் பாதிக்கப்படல் முதலியன

**வீதி அபிவிருத்தி செய்யப்படாமை விபத்துகளுக்குக் காரணமாக அமைதல்**

- தேவைக்கேற்றவாறு வீதி வலைப்பின்னல் கட்டமைப்பு ஏற்படுத்தப்படாமை

**பிற காரணங்கள்**

- **சாரதிகள்** :- வீதி ஒழுங்குகளைக் கடைபிடிக்காமை, வேகம், ஓய்வின்மை, போதையில் ஓட்டுதல், போட்டிநிலை, போதிய அனுபவமின்மை, கடவைகளையும் சமிக்ஞைகளையும் அவதானிக்காமை, அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தல்.

- **பாதசாரிகள்** :- வீதி ஒழுங்குகளைக் கடைபிடிக்காமை, மேம்பாலங்களைப் பயன்படுத்தாமை, கடவைகளைச் சரியான ஒழுங்கில் பயன்படுத்தாமை, அவசரம் முதலியன.

**கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்**

**இதுவரை எடுத்துள்ளவை**

வீதி அபிவிருத்தி, சாரதிகள் சோதிக்கப்படல், பொலிஸ் அவதானிப்புகள், வாகனங்கள் பரிசீலிக்கப்படல், பயணிக்கும் போது ஆசனப் பட்டி அணிதல், தலைக்கவசம் அணிதல்.

- மேற்கொள்ள வேண்டியவை. (பாடசாலை மாணவருக்கும் சமூகத்தவருக்கும் போக்குவரத்து விதிகள் பற்றிய கூட்டங்களை நடாத்துதல்)
  - விழிப்புணர்வுத் திட்டங்கள்.
  - சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தல்.
  - வீதி வலைப்பின்னல் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல்.

**(ஈ) சிறுகதை.**

- சிறுகதைக்குரிய அமைப்பு இருத்தல்.
- வழங்கப்பட்ட குறிப்புகளுக்கமைய கற்பனையாக எழுதப்படல்.
- கதைக்கருவினை சுவைபட நகர்த்திச் செல்லல்.
- கதாபாத்திரங்களின் பெயர்கள் கற்பனைப் பெயர்களாக அமைதல்.

(25 புள்ளிகள்)

**கவனிக்கவும் :-**

இங்கு தரப்பட்டவை கட்டுரைகளுக்கான சில வழிகாட்டுதற் குறிப்புகளே.
பரீட்சார்த்திகள் சுயமாக வெளிப்படுத்தும் பொருத்தமான கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**வினா இல 2. கட்டுரை எழுதுதல்**

| | | **புள்ளித்திட்டம்** |
|---|---|---|
| (அ) | பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| (ஆ) | கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | 06 புள்ளிகள் |
| (இ) | கட்டுரை நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| (ஈ) | தலையங்கம் | 02 புள்ளிகள் |
| | மொத்தம் | 25 புள்ளிகள் |

- **பொருளமைவும் அளவும்:-**

  அறிவுறுத்தல்கள், வழிகாட்டற் குறிப்புகள் என்பவற்றை அனுசரித்து பொருட் பொருத்தத்துடன் கேட்கப்பட்ட சொல்லளவில் கட்டுக்கோப்பாக எழுதப்படல். கருத்துக்களில் தொடர்ச்சி காணப்படல்.

- **கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும்:-**

  கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைத்தல்.
  பொருத்தமான மொழிப்பிரயோகம்.
  சொல், வாக்கிய, எழுத்து வழுக்களின்மை.
  தேவைப்படுமிடத்துப் பொருத்தமான உதாரணங்கள், மேற்கோள்கள், ஆதாரங்கள் காட்டி எழுதுதல்.

- **கட்டுரை நுட்பங்கள் :-**

  பந்தியமைப்பு, பந்திகளுக்கிடையே தொடர்புடைமை, குறியீடுகள் இடப்படல், உறுப்பமைவு, நேர்த்தி

- **தலைப்பு :-**

  பொருத்தம், சுருக்கம், கவர்ச்சி

புள்ளியிடல்

| | | | |
|---|---|---|---|
| உ-ம் | அ | - | 08 |
| | ஆ | - | 04 |
| | இ | - | 03 |
| | ஈ | - | 02 |

2 → $\frac{17}{25}$

மேற்குறிப்பிட்ட நான்கு அம்சங்களின் கீழ் புள்ளிகளைப் பகுத்து வழங்குக.

**2 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும்**




2ஆம் வினா கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டிய வினாவாகும். 97% ஆனவர்களே இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்கு வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 25 ஆகும்.

19-25 வரையான புள்ளிப் பரம்பலில் 16% த்தினரும்
13-18 வரையான புள்ளிப் பரம்பலில் 46% த்தினரும்
07-12 வரையான புள்ளிப் பரம்பலில் 28% த்தினரும்
00-06 வரையான புள்ளிப் பரம்பலில் 10% த்தினரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இல் 2 ஆம் வினாவானது கட்டுரை வினாவாகும். இலகுத்தன்மை கூடிய உபபிரிவாக (அ) பகுதி அமைந்துள்ளது. இதன் இலகுதன்மை 36% ஆகும். இலகுத்தன்மை குறைந்த கட்டுரையாக (ஈ) அமைந்துள்ளது. இதன் இலகுதன்மை 11% ஆகும்.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

இது கட்டுரை வினாவாகும். 46% த்திற்கும் குறைவான மாணவர்களே கட்டுரை எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்களைக் கருத்திற் கொண்டு விடையளித்துள்ளனர். இலகுத்தன்மை கூடிய கட்டுரையாக (அ) அமைந்திருந்தது. இவ்வினாவுக்கு 36% ஆனோர் எதிர்பார்க்கப்பட்ட வகையில் எழுதியுள்ளனர்.

கடினத்தன்மை கூடிய கட்டுரையாக (ஈ) அமைந்திருந்தது. இதற்கு 11% ஆன பரீட்சார்த்திகளே எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் விடையளித்துள்ளனர்.

- பந்திகளுக்கிடையில் கருத்துத் தொடர்பின்மை
- தலைப்பு போடாது எழுதுதல்
- அமைப்பில் காணப்படும் குறைபாடுகள் (பந்திகளுக்கிடையில் கோடு விடுதல், வெவ்வேறு இடைவெளியில் பந்தியை ஆரம்பித்தல்)
- சொற்களின் எண்ணிக்கை கருத்திற் கொள்ளப்படாமை
- மொழிச்செம்மை, கவர்ச்சியான நடையின்மை, இலக்கணச் செம்மையின்மை
- கட்டுரையில் விடய தரவுகளின் அடிப்படையில் பொருட்செறிவு இடம்பெறாமை

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

பல்வகைக் கட்டுரைகள், சிறுகதை, உரையாடல், சொற்பொழிவு என்பன எழுதும்முறை பற்றி தெளிவான விளக்கத்தை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டி மாணவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்த ஆவன செய்தல் அவசியமாகும்.

கட்டுரைக்கான சட்டகம் அமைத்தல், கட்டுரை நுட்பங்களைக் கையாளுதல், குறித்த நேரத்தினுள் நிறைவு செய்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படுதல் நல்ல பெறுபேறுகளைப் பெற உதவியாக இருக்கும்.

வினா இலக்கம் 2: (ஈ) வினாவிற்கு 11% ஆன மாணவர்களே சரியாக விடையளித்துள்ளனர்.

- சிறுகதையின் கருவினை உள்வாங்கியவாறான கவர்ச்சியான தலைப்பு இடுதல்.
- சிறுகதைக்கும் கதைக்குமான வேறுபாட்டில் தெளிவின்மை.
- ஒருவரின் வரலாறாக அன்றி, ஒரு கல்வி விபரிப்பாக அமைந்திருத்தல்.
- உயிரோட்டமான ஒரு சில பாத்திரங்களோடு கதை நகர்தல்
- கதைப் பின்னலில் தொய்வு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளுதல்
- சிறுகதை முடிவடைந்த பின்னரும் வாசகர் மனதில் கதையின் தொடர்ச்சி இடம்பெறுதல்
- நனவோடை போன்ற உத்திகளைப் பாவித்தல்.
- பல சிறுகதைகளை வாசிக்கச் செய்தல்
- குறியீட்டுப் பாவனை, சிறிய சிறிய வசனங்கள், அணிகளைக் கையாளுதல்
- உரையாடற் பாங்கு அமைந்திருத்தல்

**வினா இல.** 3

**3.** *கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின்* ***சுருக்கத்தை*** *40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக* ***(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக).***

*பரந்து விரிந்த உலகம் சுருங்கி இன்று ஒரு குவலயக் கிராமம் ஆகக் காட்சியளிக்கிறது. கற்றது கையளவு, கல்லாதது உலகளவு என்கிறோம். ஆனால் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் இன்று உலகம் கையளவு தகட்டுக்குள் அடக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பம் மற்றும் கணினி பொறித் தொழில் நுட்பம் இவற்றின் சங்கமத்தால் உருவாகிய இணையம் இன்று தகவல் பரிமாற்றத்தில் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கணினி மூலம் நமக்கு வேண்டிய தகவல்களை நாமே உலகம் முழுவதும் சென்று தேடி எடுத்துக்கொள்ள முடிகிறது. துலக்கத்துலக்கக் கேட்டதெல்லாம் கொண்டு வந்து தரும் அலாவுதீனின் அற்புத விளக்காக இன்றைய உலகில் இணையம் செயற்படுகிறது. இணையம் பற்றிக் குறிப்பிடும்போதே உலகளாவிய வலைப்பின்னல் என்ற தொடரும் சேர்ந்தே குறிப்பிடப்படுகின்றது. இணையத்தைச் சுற்றி வரும் முறையே வலை எனப்படுகிறது. வலை நோக்கர் (browser) என்ற சிறப்பு ஆணைத் தொடர்மூலம் வலையில் உள்ள கடலளவு தகவல்களைப் பெறமுடிகிறது. இணையம் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது என்றாலும் அண்மையில்தான் அதன் பயன்பாடு பெருகி மனித வாழ்வில் ஒரு பெரும் புரட்சியையே உருவாக்கியுள்ளது. தொடக்கத்தில் இணையம் அஞ்சல் செய்திகள் அனுப்புவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நாளடைவில் இணையத்தின் பயன்பாடு சிறுகச் சிறுகப் பெருகி இன்று மின் அஞ்சல், மின் வணிகம், மின்னிசை, மின் அரட்டை, மின்நூலகம் போன்ற பல வகைகளில் பயன்பட்டு வருகிறது. இணையப் பயனாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இனி வருங்காலத்தில் இது மேலும் அதிகரித்துச் செல்லும். இந்நிலையில் இணையத்தைப் பெரும்பாலும் பயன்படுத்துகிறவர்கள் யார் ? எத்தகைய தகவல்களுக்காக இணையத்தை நாடுகின்றனர் ? இணையத்தின் வாயிலாகப் பெறப்படும் பயன்கள் யாவை என்பன குறித்து ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.*

*(10 புள்ளிகள்)*

**3ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

சுருக்கம் எழுதுதல்

கவனிக்க வேண்டியவை

- பிரதான கருத்து, துணைக் கருத்துக்கள்
- சொந்த மொழிநடையில் எழுதுதல்
- கட்டுக்கோப்பாக கருத்துச் சிதைவின்றி எழுதுதல்
- பிரதான அம்சங்களை அனுசரித்தல்
- தவிர்க்க வேண்டியன தவிர்க்கப்படல். (கூறியது கூறல் - உதாரணங்கள் போன்றவை)
- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படல்
- ஒரு பந்தியாக எழுதுதல்
- குறித்த சொல்லளவில் எழுதுதல்.

முக்கிய கருத்துக்கள்

- அறிவியல் தொழினுட்ப வளர்ச்சியால் உலகம் சுருங்கிவிட்டது.
- தகவல் மற்றும் கணினிப் பொறித் தொழில்நுட்பம் ஆகிய இரண்டும் இணைந்தே இணையம் உருவாகியது.
- இணைய வலையமைப்பினூடாகவே அதிக தகவல்கள் பெறப்படுகின்றன.
- ஆரம்பத்தில் அஞ்சல் செய்திகளை அனுப்ப மட்டுமே பயன்படுத்தப்பட்ட இணையம் இன்று மின்வணிகம், மின்னிசை முதலிய பல வகைகளில் பயன்படுகிறது.
- இணையப் பயனாளிகளின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரித்துச் செல்லும். எனவே எதிர்காலத்தில் இணையத்தின் பயன்கள் பற்றிய ஆய்வு அவசியமாகும்.

சொல்லளவு

40 - 45 சொற்களுக்குள் இருத்தல் வேண்டும்.

46 - 54 சொற்களுக்குள் இருந்தால் புள்ளிகள் குறைக்கப்படும்.

55 சொற்களுக்கு மேற்படின் புள்ளிகள் வழங்கப்படமாட்டா.

(10 புள்ளிகள்)

**3ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




3ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.
08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 16% த்தினரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 34% த்தினரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 35% த்தினரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 15% த்தினரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 7 இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 16% ஆக இருக்கும் அதேவேளை 15% ஆனோர் 2 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இன் 3 ஆம் வினா சுருக்கம் எழுதுதல் ஆகும். இவ்வினாவின் இலகுத்தன்மை 53% ஆக உள்ளது.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படாமை
- சொந்த மொழிநடையில் எழுதப்படாமை
- சொற்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்ட அளவை விட அதிகமாகக் காணப்பட்டமை
- வினாவில் வந்த வாக்கியங்களில் சில சொற்களை மட்டும் நீக்கி, மீண்டும் எழுதுதல், இதனால் வாக்கியம் பொருளற்றுப் போதல்
- பந்தியில் உள்ள மையக்கருத்து துணைக்கருத்துக்களை இனங்காண முடியாமை
- பந்தியில் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களை கவனத்தில் கொள்ளாமை அல்லது அறிந்திருக்காமை.

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- சுருக்கம் எழுதும்போது சொந்த மொழிநடையில் எழுதுவதற்கும் கருத்தமைவில் தொடர்ச்சியைப் பேணுவதற்கும் மாணவர்களை வழிப்படுத்த வேண்டும்.
- வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் சொற்களை அமைத்து எழுதுவதற்குத் தொடர் பயிற்சிகளை வழங்குதல் அவசியமானது.
- பாடப்பரப்பிலுள்ள உரைநடைப்பகுதியினை வாசிக்கும்போது பந்திகளின் பிரதான கருத்தினை இனங்காணச் செய்தல்
- துணைக்கருத்துக்களை இனங்காண வைத்தல்
- தவிர்க்கப்பட வேண்டியவற்றை தரப்பட்ட பந்தியில் கோடிடுதல்
- சொல்லுக்கும் சொற்றொடருக்கும் இடையிலான வேறுபாட்டை இனங்காண வைத்தல்
- சொற்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளுதல். (கேட்கப்பட்ட சொல் எண்ணிக்கையில் 10% கூடலாம் குறையலாம்.) இவ் எல்லைக்குள் சுருக்கத்தை எழுத பயிற்சியளித்தல்.
- கற்பித்த விடயங்களை மாணவர்களிடம் வாய்மொழியாகக் கூறுதல்
- சொற்பொழிவுகள், நற்சிந்தனைகள் பல்வேறு கட்டுரைகள், பத்திரிகை ஆக்கங்கள் என்பனவற்றைச் சுருக்கி எழுத வழிகாட்டல்.

**வினா இலக்கம் 4**

**4.** பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.

கொட்டிடுவாய் மழையே - நாங்கள்
குதூகலம் எய்திடவே
சொட்டுச் சொட்டாய்த் தொடங்கி - மழையே
சோ வெனப் பெய்திடுவாய்

வளைவு கட்டி வைத்தே - பெரியார்
வருகை நோக்குதல் போல்
வளைந்த வானவில்லும் - உனது
வருகை காட்டிடுமே

நெற்றியில் நீர் சொரிய - உழவர்
நிலம் உழுத பின்பும்
வற்றிய குட்டை கண்டால் - உடனே
மாமழை பெய்திடுவாய்

வாரிப் பொருளை யெலாம் - நன்கு
வழங்கி நிற்போரை
மாரிபோலப் பொழிவார் - என்றே
வாழ்த்தும் மனித குலம்

(i) மழை நன்றாகப் பெய்தல் வேண்டும் என்பதைக் குறிக்க கவிஞர் பயன்படுத்தும் **இரண்டு** தொடர்களை எழுதுக.

(ii) வானவில் பற்றி இங்கு கவிஞர் என்ன கூறுகின்றார் ?

(iii) உழவனுக்கும் மழைக்குமிடையே உள்ள தொடர்பு யாது ?

(iv) வாரிப் பொருளையெலாம் எனத் தொடங்கும் கடைசிப் பாடலில் கையாளப்பட்டுள்ள அணி யாது ? விளக்குக.

(v) பொருள் தருக.

(அ) குதூகலம் (ஆ) குட்டை

*(10 புள்ளிகள்)*

**4 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) கொட்டிடுவாய் மழையே.
சோவெனப் பெய்திடுவாய்.
மாமழை பெய்திடுவாய்.
**(எவையேனும் இரண்டு)**

(ii) மழை பெய்யப்போவதை வானவில் காட்டுவதாகக் கவிஞர் கூறுகிறார்.

(iii) உழவன் தொடர்ந்தும் பயிர் செய்ய மழை தேவை என்பது உழவனுக்கும் மழைக்குமுள்ள தொடர்பு ஆகும்.

(iv) அணி - உவமையணி
கொடை கொடுப்போர் மாரிக்கு உவமிக்கப்படுகின்றனர்.
உவமானம் - மாரி
உவமேயம் - கொடைகொடுப்போர்
பொதுத்தன்மை - கொடை

(v) (அ) குதூகலம் - மகிழ்ச்சி/ சந்தோசம்/ களிப்பு/ உவகை/ உற்சாகம்
(ஆ) குட்டை - குளம்/ சிறியகுளம்/ சிறிய நீர்நிலை/ ஊருணி

(2 × 5 = 10)

**4 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




4ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.
08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 19% த்தினரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 25% த்தினரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 35% த்தினரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 21% த்தினரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவுக்கு v ஆம் வினா தவிர்ந்த ஏனைய 4 வினாக்களுக்கும் சராசரியாக 49% பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியாக விடையளித்துள்ளனர். இலகுத்தன்மை கூடிய வினாவாக (v) (அ) அமைந்துள்ளது. இவ்வினாவுக்கு 87% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். இவ்வினா மாணவர்களது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் மிகப்பரிச்சயமான சொற்பிரயோகமாக அமைந்தமையால் அடைவுவீதம் அதிகரித்துள்ளது எனலாம். கடினத்தன்மை கூடிய வினாக்களாக iஆம், iiiஆம் வினாக்கள் அமைந்துள்ளன.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- விடைகள் பூரண வாக்கியங்களில் எழுதப்படாமை
- மாணவர் தமது சொந்த மொழிநடையில் எழுதாமை. பாடல் வரிகளையே விடையாக எழுதியிருந்தமை
- உழவனுக்கும் மழைக்குமிடையே உள்ள தொடர்பு விளங்கிக்கொள்ளப்படவில்லை.
- இலகுவான பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் அமைந்தபோதும் மாணவர்கள் திருப்தியாக விடை எழுதவில்லை.
- அறிவுறுத்தலில் கூறியபடி பூரணத்துவமான வாக்கியங்களில் விடை எழுதவில்லை

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- கிரகித்தற் பகுதி வினாக்களுக்கு பூரணவாக்கியங்களில் விடையெழுதப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.
- பாடலை நன்கு வாசித்து கிரகித்து சரியாக விடையளிக்கும் திறனை வளர்ப்பதற்குத் தொடர் பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.
- இலகுவான பாடல் பயிற்சிகளைக் கொடுத்துப் பயிற்றுவித்தல்
- சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறனை விருத்தி செய்தல்
- மாணவர்களின் கிரகிக்கும் திறனை விருத்தி செய்வதற்கு மேலதிகமான பயிற்சிகளை வழங்குதல்
- நிறுத்தற் குறிகளை கவனத்திற் கொண்டு விடை எழுதப் பயிற்றுவித்தல்.

**வினா இல. 5**

**5.** ***அரசாங்கம் பாடசாலை மாணவருக்கு பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்கி வருவது ஒரு வரப்பிரசாதமாகும். இவ்வாறு பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குவதன் முக்கியத்துவத்தினைக் குறிப்பிட்டும் அவற்றைப் பக்குவமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் 100 சொற்களில் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதுக.***

***அல்லது***

***நீர் வாழும் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சுமார் 50 குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்கள் வசதிகளற்ற குடிசைகளிலும் கூடாரங்களிலும் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். காலங்கடந்துவிட்ட நிலையில் அவர்களுக்குப் போதிய வசதிகளுடனான வீடுகள் கட்டித் தரவேண்டுமென வினயமாகக் கேட்டு வீடமைப்பு அமைச்சருக்கு 100 சொற்களில் ஓர் அறிக்கை எழுதுக.***

*(15 புள்ளிகள்)*

**5ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**கடிதம் / அறிக்கை**

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 04 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 08 புள்ளிகள் |
| மொழிநடை | - | 03 புள்ளிகள் |

- **கடிதம்**
    - பத்திரிகை ஆசிரியரிடம் கடிதத்தைப் பிரசுரிக்கும்படி வேண்டுதல்
      பத்திரிகை ஆசிரியருக்கு பிரசுரிக்கும்படி வேறொரு கடிதம் எழுதி, அதன் பின் தலைப்பிட்டு கொடுக்கப்பட்ட விடயத்தைத் எழுதி இணைக்கலாம். அல்லது ஒரே கடிதத்திலேயே பிரசுரிக்குமாறு வேண்டுகோள் விடுத்து விடயத்தைத் தலைப்பிட்டு தொடர்ந்து எழுதலாம்.

- கடிதத்தில் இடம்பெற வேண்டிய விடயங்கள்

  பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்குவதன் முக்கியத்துவம்
  - வறிய மாணவர்களுக்கு இது வரப்பிரசாதமாக அமைதல்.
  - பாடசாலையை விட்டு இடைவிலகுவோரின் எண்ணிக்கை குறையும்.
  - எல்லாப் பிரதேசங்களையும் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் அனைத்துப் பாடநூல்களும் கிடைக்கும்.
  - மாணவரின் கற்றல் திறன் மேம்படும்.

  இலவசப் பாடப்புத்தகங்களைப் பக்குவமாகப பயன்படுத்த வேண்டியதன் அவசியம்.
  - அடுத்துவரும் மாணவர்களுக்கு வழங்குதல்.
  - அரசு பெருந்தொகையான பணத்தை இதற்காகச் செலவழித்தல்.
    பக்குவமாகப் பயன்படுத்தலால் செலவினம் குறையும்.
    (வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்கான செலவில் கணிசமான தொகை இதற்காக ஒதுக்கப்படுகிறது.)

**(இவை போன்ற பொருத்தமான கருத்துக்கள் இடம் பெறலாம்.)**

**அல்லது**

- **அறிக்கை**
  - விடயம் பற்றிய தலைப்பு இடுதல்
  - யாருக்குச் சமர்ப்பித்தல் எனக் குறிப்பிடுதல்
  - நியம மொழியில் எழுதுதல்
  - அறிக்கையைப் பந்தி பிரித்து எழுதுதல் அல்லது பந்திகளுக்கு உபதலைப்புக்கள் இட்டு எழுதுதல்
  - அறிக்கை, பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் சுட்டிக் காட்டுவதாக அமைதல்
  - யாரால் சமர்ப்பிக்கப்படுகின்றதெனக் குறிப்பிடல்

- **அறிக்கையில் இடம்பெற வேண்டிய விடயங்கள்**
  - பாதிக்கப்பட்ட பிரதேசம்
  - பரிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை
  - குடிசை, கூடாரங்களில் வாழ்வதனால் அனுபவிக்கும் சிரமங்கள்
    - அடிப்படை வசதிகளற்ற வாழ்க்கை.
    - சுகாதாரச் சீர்கேடு.
    - கல்விப் பின்னடைவு.
    - ஒழுக்கச் சீர்கேடு மற்றும் பிற.
  - இது தொடர்பாக முன்னர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பயனளிக்காமை.
  - வீடு கட்டித் தரும்படி வினயமாக வேண்டல்.

    **(இவை போன்ற பொருத்தமான கருத்துக்கள் இடம்பெறலாம்.)**

(15 புள்ளிகள்)

**5ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




இவ்வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.

12-15 வரையான புள்ளிப் பரம்பலில் 12% த்தினரும்
08-11 வரையான புள்ளிப் பரம்பலில் 43% த்தினரும்
04-07 வரையான புள்ளிப் பரம்பலில் 34% த்தினரும்
00-03 வரையான புள்ளிப் பரம்பலில் 11% த்தினரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




கடிதம், அறிக்கை என்பவற்றிற்கு 49%த்தினர் மாத்திரம் சரியாக விடையளித்துள்ளனர்.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- கடிதத்தின் அமைப்பு பேணப்படவில்லை
- உள்ளடக்கத்தில் பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்குவதன் முக்கியத்துவத்தையும் பக்குவமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தவில்லை
- கடிதத்தை பத்திரிகையில் பிரசுரிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படவில்லை
- அறிக்கையின் அமைப்புப் பேணப்படவில்லை
- நியம மொழியில் எழுதப்பட்டிருந்தமை
- கேட்கப்பட்ட கடிதம் எவ்வகையினுள் அடங்குகின்றது என மாணவர் புரிந்து கொள்ளாமை
- கடித வகையினை மாணவர் புரிந்துகொள்ளாமையால் சரியான கட்டமைப்பினுள் கடிதத்தை எழுதாமை
- உயிரோட்டமான சொற்களையும் சொற்றொடர்களையும் கையாண்டு கருத்துக்களை வெளிப்படுத்தமை

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- வினாக்களை மேலோட்டமாக வாசிக்காது அவதானத்துடன் முழுமையாக வாசித்து அவ்வினாக்களின் பிரதான சொற்களை (Keywords) இனங்காண்பதுடன் அவற்றைச் சரியாகக் கிரகித்து விடையளிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துதல் சிறந்தது.
- நடைமுறைத் தேவைக்குரிய இந்த எழுத்தாக்கங்கள் தொடர்பான பயிற்சிகளைத் தொடர்ச்சியாக வழங்குதல்
- உறவு முறைக் கடிதம், தொழின்முறைக் கடிதம் என்பவற்றுக்குள் உள்ளடக்கப்படும் கடிதத் தலைப்புக்களை மாணவருக்கு தெளிவாகக் கற்பித்தல்
- ஒவ்வொரு கடித வகையும் எழுதப்பட வேண்டிய அமைப்பு முறையை மாணவருக்கு காட்சிப்படுத்தி அவற்றை தாமாக எழுதுவதற்குத் தூண்டுதல்.
- அமைப்பிற்குரிய புள்ளி 04 அதனை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வழிப்படுத்தல்
- குறியீடுகளை அனுசரித்து எழுத வழிகாட்டல்
- மொழிநடையினை சிறப்பாக அமைத்து எழுதச்செய்தல்
- அறிக்கை எழுதும் போது அனுசரிக்க வேண்டிய அம்சங்களைக் கற்பித்தல்
- பாடசாலை நிகழ்வுகளை அறிக்கையாக எழுதும்படி பயிற்சியளித்தல் (பரிசளிப்பு விழா விளையாட்டுப் போட்டி, சிரமதான நிகழ்வுகள்)

# தமிழ்மொழியும் இலக்கியமும் - III

## 2.3. வினாப்பத்திரம் III இற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.3.1 வினாப்பத்திரம் III - கட்டமைப்பு

நேரம் :- 2 மணித்தியாலங்கள் 7 வினாக்கள் தரப்படும் (மொத்தப் புள்ளிகள் 80)
(விதிக்கப்பட்ட தமிழ் இலக்கிய பாடநூல்)

4 கட்டாய வினாக்களுக்கும் மேலும் ஒரு வினாவுக்கும் விடையளித்தல் வேண்டும்.
(1,2,3,4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை. வினாக்கள் 5,6,7 இல் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.)

1. குறுவிடை வினாக்கள் 10. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்
2. செய்யுட்பகுதியும் உரைநடைப் பகுதியும் சேர்ந்த நான்கு உபபகுதிகள். ஒரு உபபகுதிக்கு 5 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்
3. விருப்பு வினாக்கள் 02 வழங்கப்படும். அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும். 15 புள்ளிகள்
4. விருப்பு வினாக்கள் 02 வழங்கப்படும். அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும். 15 புள்ளிகள்
5. 5,6,7 ஆகிய வினாக்களில் யாதேனும் ஒரு வினாவுக்கு விடையளித்தல் வேண்டும். 10 புள்ளிகள்

**வினாப்பத்திரம் III இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+25+10+10+15**
**= 80 புள்ளிகள்**

## 2.3.2 வினாப்பத்திரம் III - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்

**வினா இல. 1**

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) 'வியாஸ கீதை' என்பது யார் யாருக்குக் கூறிய விடைகளின் தொகுப்பு நூலாக அமைந்துள்ளது ?

(ii) 'முள்ளு மூணும் மண்ணுக்குள்ளே
முழிக ரெண்டும் என்மேல' - இவ்வடிகளில் காதல் உணர்வு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது ?

(iii) "மகாலட்சுமி போல இருக்கீங்கம்மா ! ஒங்களுக்கு ஒண்ணும் கொறவு வராது' இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது ?

(iv) "கையில் வெண்ணெயிருக்க நெய்தேடி அலையும் வெள்ளியரும் உண்டு"

(அ) இந்தப் பழமொழியின் கருத்தைத் தருக.

(ஆ) 'வெள்ளியர்' என்பதன் பொருள் யாது ?

(v) 'கச்சி ஒரு கால் மிதியா ......... தண்ணுஞ்சை தான் மிதியாய் ......... ஈழம் ஒருகால் மிதியா' - இங்கு கச்சி, உஞ்சை, ஈழம் என்ற நகரங்கள் ஒவ்வொன்றினதும் பிற பெயர்கள் எவை ?

(vi) பின்வருவனவற்றுள் பிரபந்தம் **அல்லாதது** எது ?

(அ) உலா (ஆ) கோவை (இ) காப்பியம் (ஈ) கலம்பகம் (உ) பரணி

(vii) '......... உயர் மாமலையை மதிக்கு நிகராக வழுத்து' இது காளமேகப் புலவர் பாடிய பாடலின் ஓர் அடி. புலவர் மலைக்கும் மதிக்குமிடையே காணும் ஒப்புமை யாது ?

(viii) 'நாள்தொறும் நாடி முறை செய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்'

(அ) மன்னவன் ஒருவன் எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என இக்குறட்பா கூறுகிறது ?

(ஆ) அவ்வாறு ஆட்சிபுரியாவிடில் ஏற்படும் விளைவு யாது ?

(ix) 'மங்கையற்கரசியின் காதல்' என்ற சிறுகதையில் வ.வே.சு. ஐயர் 'சூசிகையை' இணைத்துள்ளார். சூசிகை என்பது யாது ?

(x) 'பாற்கடல் முழுவதையும் பருகுவதற்கு ஒரு பூனையால் முடியுமா' - இங்கு பாற்கடல் எனக் கம்பர் குறிப்பிட்டது எதனை ?

(20 புள்ளிகள்)

**1 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**சுருக்க விடை**

(i) கசாப்புக்காரனால் / கசாப்புக் கடைக்காரனால்
யெளவன சந்நியாசிக்கு / சந்நியாசிக்கு

(ii) வேலையில் ஈடுபட்டிருக்கும் வேளையில் கூட அவன் மனம் / எண்ணம் / பார்வை தலைவியின் பாலே இருந்தது./ வேலையை மறக்குமளவிற்கு அவள்மீது கொண்ட காதல் கூறப்படுகிறது.

(iii) நகரத்தார் இனப் பெண்ணினால் குஞ்சம்மாளுக்கு கூறப்பட்டது. /
பயணம் செய்த பெண்ணால் குஞ்சம்மாளுக்கு / பூக்கொடுத்த பெண்ணால் குஞ்சம்மாளுக்கு / விழுப்புரம் ஸ்டேசனில் ஏறிய பெண்ணால் குஞ்சம்மாளுக்கு

(iv) (அ) நாம் தேடும் / விரும்பும் பொருள் அருகில் இருக்கத்தக்கதாக எங்கெங்கோ தேடியலைதல்
(ஆ) அறிவிலிகள் / பேதையர் / அறிவற்றவர்கள்

(v) கச்சி - காஞ்சிபுரம்
உஞ்ஞை - உச்சயிணி
ஈழம் - இலங்கை

(vi) காப்பியம்

(vii) நிலவாய் விளங்குதல் / நீள்வான் படிதல் / சிலபோது உலாவுதல் /
தலைமேல் உதித்தல். இதனூடாக சந்திரனையும் மலையையும் ஒப்புமை காட்டல்

(viii) (அ) நாட்டில் ஏற்படும் குறைகளைத் தேடி அறிந்து ஆராய்ந்து தீர்வு காண்பவனே சிறந்த. அரசனாவான்.
(ஆ) ஒவ்வொரு நாளும் நாடு கெட்டுக் கொண்டே போகும்.

(ix) முன்கதைச் சுருக்கம் / அறிமுகம் / முன்னோட்டம் / கதைக்கான முன்னுரை

(x) வால்மீகி இராமாயணம் (2 x 10 = 20 புள்ளிகள்)

**1ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




1ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.
16-20 வரையான புள்ளிப் பரம்பலில் 4% த்தினரும்
11-15 வரையான புள்ளிப் பரம்பலில் 19% த்தினரும்
06-10 வரையான புள்ளிப் பரம்பலில் 35% த்தினரும்
00-05 வரையான புள்ளிப் பரம்பலில் 42% த்தினரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 12 உபபரிவுகள் காணப்படுகின்றன. கடினத்தன்மையுடைய வினாக்களாக iii,vi,vii, x ஆகிய வினாக்கள் அமைந்துள்ளன. இவற்றுள் x ஆவது வினா அதிக கடினத்தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இவ்வினாவுக்கு 8% ஆனோரே சரியான விடையினை அளித்துள்ளனர். viஆம் viiஆம் வினாக்களுக்கு 22% ஆன பரீட்சார்த்திகளும் iiiஆம் வினாவுக்கு 34% ஆன பரீட்சார்த்திகளும் சரியான விடையளித்துள்ளனர்.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- நகரத்தார் இனப்பெண்மணி என்ற விளக்கம் பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை. நகரப் பெண் என விடையளித்திருந்தமை
- சிற்றிலக்கியங்கள் பற்றிய போதிய விளக்கமின்மை
- மலைக்கும் மதிக்குமிடையிலான ஒப்புவமையை இனங்காணாமல் பாடலின் பொருளை மாத்திரம் எழுதியிருந்தமை
- வினா இல. 1- (vi), (vii) ஆகிய வினாக்களுக்கு முறையே 22%, 21% மாணவர்களே விடையளித்துள்ளனர்.
- பெரும்பாலான ஆசிரியர்கள் தமிழ்மொழியும் இலக்கியமும் 10,11 (இலக்கணம், உரைநடைப்பகுதி) பாடநூல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்காமை
- மாணவர்கள் இலக்கியத் தொகுப்புக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தினை மேற்குறிப்பிட்ட பாடநூல்களுக்கு வழங்காமை
- நூலகப் பயன்பாடு குறைவாகக் காணப்படுகின்றமை
- வினா இலக்கம் - x இல் 8% ஆன மாணவர்களே சரியான விடையளித்துள்ளனர். இவ்வினா கவிச்சக்கரவர்த்தி என்ற உரைநடைப் பாடப்பரப்பில் வந்துள்ளது.
- வினா மயக்கம் ‘இங்கு பாற்கடல் எனக் குறிப்பிட்டது எதனை? என வினா கேட்கப்பட்டிருப்பதால் ‘கம்பராமாயணம்’ என விடையளித்துள்ளனர். ‘வான்மீகி இராமாயணம்’ பற்றிய விளக்கம் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை.

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

சந்தர்ப்பம் கூறுதல்
சிற்றிலக்கிய வகைகள்
செய்யுளின் பொருள்
அணிவிளக்கம்

குறிப்பொருள் போன்றவற்றை மாணவர்கள் நுணுக்கமாகவும் ஆழமாகவும் புரிந்துகொள்ளும் வண்ணம் கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துவதோடு தொடர் பயிற்சிகளை வழங்குவதும் அவசியமாகும்.

- இலக்கியப் பகுதிகளைக் கற்பிக்கும்போது பாடப்பரப்பிலுள்ள விடயங்களை அப்படியே வழங்காது மேலதிகமாக விளக்கங்களை மாணவர்களுக்கு வழங்குவதினூடாக சிந்தனையை விரிவடையச் செய்யலாம்
- பாடப்பரப்பினுள் ‘திருப்பாற்கடல்’ என உருவகிக்கப்பட்டிருப்பது ‘வான்மீகி இராமாயணம்’ என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

வினா இல. 2

**2.** *பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.*

(அ) *நகைநலம் நட்டார்கண் நந்துஞ் சிறந்த*
*அவை நலம் அன்பின் விளங்கும் விசைமாண்ட*
*தேர்நலம் பாகனாற் பாடெய்தும்* ***ஊர்நலம்***
***உள்ளானால் உள்ளப்படும்.***

(ஆ) *மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்குகரத்*
*தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நல்நாட்டில்*
***பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போலவரும்***
***வெண்ணிலா வேயிந்த*** *வேகமுனக் காகாதே*

(இ) *ஆற்றுவழியாகவும் ஊற்றுவழியாகவும் நன்னீரைத் தன் அகத்தே நிரப்பிக்கொள்ளும் இப்பொய்கைபோல் அறிவுடையார் நல்வழியால் ஈட்டிய பெரும் பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள். நீர் நிறைந்த பொய்கை எப்பொழுதும் தண்மை வாய்ந்து விளங்குதல் போல்,* ***அறிவுடைய செல்வரும் ஈரம் வாய்ந்த நெஞ்சினராய் இலங்குவார்கள்.*** *தாகத்தால் வருந்தி வருவோர்க்குத் தடையின்றி நீர் வழங்கும் தடாகம்போல், கல்வியும் செல்வமும் பூத்த மேலோர்வறிஞர்க்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளங்குவார்கள்.*

(ஈ) *சந்தியாதேவி நாணத்தினால் தலைகுனிந்து கீழ்த்திசை அடிவானத்தினின்றும் மெல்ல அடிவைத்து வானவீதியிலே வந்து கொண்டிருக்கின்றாள். அவளுடைய வருகை ஓர் இனிய சங்கீதத்தைப் போன்றிருக்கிறது.* ***கல்யாணிராகத்தின் அவரோகணம் போல் அவளுடைய சௌந்தர்யம் இனிமையானது; உள்ளம் கவர்வது.*** *அது நாணத்தினால் ஆக்கப்பட்டது; நிமிர்ந்து பார்க்காது; ஆனாலும் மகிழ்ச்சி ஊட்டுவது.*
*(20 புள்ளிகள்)*

**2ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(அ) **பொருள்:**

முகமலர்ச்சியின் நன்மை நட்புச் செய்த நண்பர்களிடத்து சிறந்து விளங்கும். சபையின் நன்மை அன்பினால் விளங்கும். வேகம் மிகுந்த தேர் அதனைச் செலுத்தும் பாகனால் சிறப்படையும். குடிமக்களின் நன்மை அவ்வூரில் உள்ள அரசனின் நற்செயல்களால் மதிக்கப்படும்.

(3 புள்ளிகள்)

**சிறப்பு:-**

- அரசனின் ஆட்சி சிறப்பிக்கப்படுகிறது.
- ஊரின் நன்மை / குடிமக்களின் நன்மை அவ்வூரை ஆட்சி செய்கின்ற மன்னனின் நற்செயல்களால் மதிக்கப்படும். (மன்னனின் நல்லாட்சிதான் சகல சிறப்புக்களுக்கும் காரணமாகும்.)

(2 புள்ளிகள்)

(3 + 2 = 5 புள்ளி)

(ஆ) **பொருள்:**

இந்த உலகத்தில் எல்லோரும் சிறப்பாக வாழ மேகத்தைப் போல வாரி வழங்குகின்ற கைகளை உடையவனும் குளிர்மை பொருந்திய மாலையை அணிந்தவனும் தமிழ் மொழிக்கு உரியவனுமான நந்திவர்மனது வளம் மிக்க நாட்டிலே, பெண் பிறப்பே இல்லாத ஊரில் பிறந்தவர்களைப் போல என்மீது இரக்கம் இல்லாமல் தோன்றும் வெண்ணிலாவே, இந்தக் கொடிய தன்மை உனக்கு இருப்பது தகாது. (3 புள்ளிகள்)

**சிறப்பு:-**

- பிரிவுத்துயர் - தலைவனைப் பிரிந்த தலைவியின் பிரிவுத்துன்பம் குறிப்பிடப்படுகின்றது.
- நிலவை இரக்கமற்றதாகத் தலைவி காண்கிறாள்.

**அல்லது**

உவமையணி மூலம் விளக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| உவமானம் | - | பெண்ணிலா ஊரில் பிறந்தார். |
| உவமேயம் | - | பெண்ணை வருத்துகின்ற வெண்ணிலா |
| பொதுத்தன்மை | - | இரக்கமின்மை/ பெண்ணின் மனநிலையை விளங்கிக் கொள்ளாமை |

(2 புள்ளிகள்)

(3 + 2 = 5 புள்ளி)

(இ) **பொருள்:**

ஆற்றுவழியாகவும் ஊற்றுவழியாகவும் வரும் நல்ல நீரைத் தன்னிடத்தில் நிரப்பிக் கொண்ட குளம்போல அறிவுடையவர்கள் நல்ல வழியால் தேடிய பொருளால் நிறைந்த செல்வந்தர்களாக விளங்குவார்கள். நீர் நிறைந்து காணப்படும் குளம் எப்பொழுதும் குளிர்மையாக விளங்குவது போல அறிவுடைய செல்வந்தரும் அன்பு நிறைந்த உள்ளத்தவராய் விளங்குவார்கள். தாகத்தால் வருந்தி வருவோருக்குத் தடையில்லாது நீர் வழங்கும் குளம்போல கல்வியும் செல்வமும் உடைய உயர்ந்தவர்கள், வறியவர்களுக்கு குறைவின்றிப் பொருள் வழங்கும் கொடையாளியாக விளங்குவார்கள்.

(3 புள்ளிகள்)

**சிறப்பு:-**

- அறிவுடைய செல்வர்களின் கொடை சிறப்பிக்கப்படுகிறது.
- அறிவுடைய செல்வர்கள் அன்பு / இரக்கம் உடையவர்களாக விளங்குவார்கள்./ இரக்க சிந்தை - வாரி வழங்கும் செயலை ஊக்குவிக்கும்.

(2 புள்ளிகள்)

(3 + 2 = 5 புள்ளி)

(ஈ) **பொருள்:**

மாலைப் பொழுதாகிய பெண் வெட்கத்தினால் தலைகுனிந்து கிழக்குத்திசை அடிவானத்தினின்றும் மெல்ல அடிவைத்து வானவீதியிலே வந்து கொண்டிருக்கின்றாள். அவளுடைய வருகை ஓர் இனிய சங்கீதம் போன்றுள்ளது. கல்யாணி ராகத்தின் அவரோகணம் போலவே அவள் வருகை இனிமையானதாகும். உள்ளத்தைக் கவரக்கூடியதுமாகும். அது வெட்கத்தினால் ஆக்கப்பட்டது. தலை நிமிர்ந்து பார்க்காது. எனினும் மகிழ்ச்சி தருவது.

(3 புள்ளிகள்)

**சிறப்பு**

- சந்தியாதேவியின் / மாலைப்பொழுதின் காட்சி அழகு சிறப்பிக்கப்படுகிறது.
- உவமையணி கையாளப்பட்டுள்ளது. மாலைப்பொழுது கல்யாணி ராகத்தின் அவரோகணம் போல இனிமையானது. உள்ளம் கவர்வது எனக் கூறப்படுகிறது.

(2 புள்ளிகள்)

(3 × 2 = 5 புள்ளி)

(5 × 4 = 20 புள்ளி)

**2ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

**வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




2ஆம் வினாவும் கட்டாய வினாவாக இருந்த போதும் 98% ஆனவர்களே இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப்புள்ளிகள் 20 ஆகும்.

16-20 வரையான புள்ளிப் பரம்பலில் 7% த்தினரும்
11-15 வரையான புள்ளிப் பரம்பலில் 19% த்தினரும்
06-10 வரையான புள்ளிப் பரம்பலில் 28% த்தினரும்
00-05 வரையான புள்ளிப் பரம்பலில் 46% த்தினரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




4 பிரிவு வினாக்களைக் கொண்ட 2ஆம் வினாவுக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் ஏறக்குறைய 50% த்திலும் குறைந்தவர்களே சரியாக விடையளித்துள்ளனர்.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- அடிக்கோடிட்ட பகுதியின் சிறப்பினைச் சரியாக இனங்கண்டு எழுதாது பாடலின் பொருளையே மீண்டும் எழுதியிருந்தமை
- உரைநடைப் பகுதியில் காணப்பட்ட சந்தியாதேவி என்னும் அரும்பதத்தின் விளக்கத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமை
- மாணவர்கள் சொந்த உரைநடையில் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி பொருள் எழுத முடியதவர்களாகக் காணப்பட்டனர்.
- பாடலை சந்தி பிரித்தல், கொண்டு கூட்டுதல், அருஞ் சொற்களின் பொருளை அறிதலில் இடறுதல்
- பாடலினூடாக வெளிப்படுத்தப்படும் மையக்கருத்து, விழுமியக் கருத்துக்களை இனங்காண முடியாதவர்களாக இருத்தல்
- பொருள், பொருள் சிறப்பு ஆகியவற்றை வேறுபடுத்தி எழுதாமல் ஒரு பந்தியில் குழப்பமான விதத்தில் எழுதுதல் அல்லது பொருளையே சிறப்பிற்கும் எழுதுதல்
- சொல்லணி, பொருள் அணி ஆகியவற்றை இனங்காண முடியாதவர்களாகக் காணப்படல்

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- அடிக்கோடிட்ட பகுதியின் சிறப்பைச் சரியாக அறிந்துகொள்வதற்குரிய பயிற்சிகளை வழங்குதல்
- அரும்பதங்களுக்குரிய சரியான விளக்கத்தைப் பெறுவதற்கு வழிகாட்டுதல்
- பாடல்களைக் கற்பித்த பின் அவற்றின் பொருளைத் தாமாக எழுதப் பயிற்றுவித்தல்
- சந்திபிரித்தல், கொண்டு கூட்டுதல், அருஞ்சொற்களின் பொருளை அறிதல் ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்
- சந்தி பிரித்தலுக்கான பாடல்களைக் காட்சிப்படுத்தல்
- பாவோதல் பயிற்சிகளை வழங்குதல், போட்டிகளை நடாத்துதல்
- பாடல்களின் பொருளை சம்பவங்களாகப் பதிவுசெய்து அவற்றினூடாக அதன் பொருள், சிறப்பு மையக்கருத்து ஆகியவற்றை வெளிக்கொணரச் செய்தல்
- அணிகளைத் தெளிவாக விளங்கப்படுத்துதல்

வினா இல. 3

**3.** ***‘பாரதியார் கவிநயம்.’*** *என்ற கட்டுரையில் பாரதியார் நாட்டின் விடுதலைக்கும் தமிழ்மொழிக்கும் ஆற்றிய பணிகள் கூறப்பட்டிருக்குமாற்றை விபரிக்குக.*

***அல்லது***

*சடையப்பவள்ளலது வள்ளன்மை, தமிழார்வம், கம்பருக்கும் அவருக்குமிடையிலான குடும்ப உறவு என்பன* ***‘கவிச்சக்கரவர்த்தி’*** *என்ற நாடகத்தில் புலப்படுத்தப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.*

*(15 புள்ளிகள்)*

**3 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**நாட்டின் விடுதலைக்கு ஆற்றிய பணிகள்**

- தம்முடைய தேசத்தாருக்கு தேசிய உணர்ச்சியை உண்டு பண்ணும் நோக்கமாகப் பாடப்பட்டது. இத்தேசிய பாடல்களையே அநேகர் விரும்பிப் படித்தனர்.

தேசிய பாடலில் குறிப்பிடத்தக்கது - வீரமுரசம்

- ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது வந்த செல்வத்தைப் போல என தேச விடுதலை பற்றி பாரதியார் பாடுகிறார்.

(02 + 02 = 04 புள்ளிகள்)

**மொழிக்காக ஆற்றிய பணிகள்**

அவர் நமது மொழியை நாம் அனைவரும் பயன்படுத்தும் சுதந்திரத்தை அளித்தார். அதாவது பண்டைய புலவர்கள் உயர் பாஷை நடையில் செய்யுள் செய்ய பாரதியார் சிறு குழந்தைகள் முதல் பண்டிதர் வரை படித்து இன்புறும் சுதந்திரத்தை அளித்தார். இவற்றை விட

- பாரதியார் விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடைய இன்தமிழ்ப் பாடல்களைப் பாடினார்.
  - “ கன்னலும் தேனும் கனியுமின்பாலும் .....”
- கவிதையில் உணர்வுக் கோலங்களைப் புகுத்தினார்.
  காதல் உணர்வு / தாயுணர்வு / பக்தி உணர்வு வெளிப்பாடு
  உ+ம் : தெய்வ உணர்வு - “சொல்லுக்கடங்காவே .....”
  உ+ம் : தாய்மை உணர்வு - “சொல்லும் மழலையிலே ......”
  மனச் சஞ்சலத்தை வெளிப்படுத்துதல்.
  “பெண்ணென்று பூமிதனில் ......”
- கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, காட்சி, வேதாந்தப் பாடல்கள், பாஞ்சாலி சபதம் போன்றவற்றை எழுதினார்.
- வசன கவிதையை அறிமுகம் செய்தமை - அறிவதற்கு அரிய வேதாந்த கருத்தை தெளிவுடனும் சுவையாகவும் தந்தமை.
  “ ஞாயிறே இருளை என்ன ...”
- கவிதையில் புதிய சொற்கோலங்களை உருவாக்கியமை.
  + மடக்கு
  - கூடல், கூடல், கூடல்
  - கழற்றிடக், கழற்றிட....
  - வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே......

பாரதியாரைத் தமிழென்னும் கற்பக விருட்சத்தில் அரும்பி மலர்கின்ற புஷ்பம் என்றும் இளங்கோ, கம்பனுக்குப் பின் வாராது வந்த செல்வம் என்றும் ஆசிரியர் சிறப்பித்துக் கூறுவது.

(பணிகள் 8 புள்ளிகள்)

(ஆதாரம் 3 புள்ளிகள்)

(08 + 03 = 11 புள்ளிகள்)
(04 + 11 = 15 புள்ளிகள்)

**அல்லது**

(அ) **சடையப்ப வள்ளலின் வள்ளன்மை**

- எதிரி நாடென்று தெரிந்திருந்தும் பஞ்சத்தால் வாடிய இலங்கைக்கு ஆயிரம் தோணிகளில் நெல்லனுப்பியமை
- "இன்னான் என்று அறியாத என்னை, மன்னர் வணங்கும்படி செய்த வள்ளல்" என்று கம்பன் கூறுவது
- கம்பருக்கு அவர் செய்த ஆதரவு மற்றும் கம்பனின் நன்றியுணர்வு வார்த்தைகள்
  - "சடையன் வீட்டில் உண்டதை இறக்கும் போதும் மறவேன்" என்றது.
- பொன்னம்பலத்தில் நடராஜப் பெருமான் உலகுய்ய நின்று ஆடுவதும் திருவேரங்கத்தில் கார்மேகவண்ணன் யோக நித்திரை செய்வதும் சடையன் என்ற தரும தேவதை சோழ நாட்டில் வாழ்ந்ததால் என்று பாடியிருக்கின்றமை.

(ஆ) **தமிழார்வம்**

- தமிழ்ப்புலவரை ஆதரித்தமை.
- தம் பிள்ளைகளைத் தமிழார்வமுடையவர்களாக வளர்த்தமை
  (சேதிபன் ஏர் எழுபதை ஆராய்கிறேன் எனக் கூறியது, கம்பருடன் சேர்ந்து பெருந்தேவனாருடைய பரதம் படித்தது.)
- இராமாயணம் தன்வீட்டில் இருந்துதான் எழுதப்படப் போகிறது என்றபோது சடையன் கொண்ட மகிழ்ச்சி

(இ) **கம்பனுக்கும் சடையனுக்கும் இடையேயான குடும்ப உறவு**

- என் கம்பர் - என்று சடையன் உரிமையுடன் கூறுவது
- சடையன் அவன் மனைவி மகேஸ்வரி, பிள்ளைகள் இருவர் கம்பனுடன் கொள்ளும் உறவும் உரையாடலும் மகேஸ்வரியின் பாதங்களைக் கம்பன் வணங்குதல், பிள்ளைகள் இருவரும் கம்பரது கரம் பற்றுதல், அவருடன் கூட உண்ணுதல்.
- கம்பர் முன்னறிவித்தலின்றி சடையனது வீட்டுக்கு வருதல்
- குலோத்துங்கன் சடையனுக்கு கட்டளை அனுப்பியது கேட்டு அரசன் மீது கோபங்கொள்ளல்
- புனிதமான காவியம் இயற்றும் செயலை சடையன் வீட்டிலே செய்ய வேண்டும் எனக் கம்பர் நினைத்தது.
- கம்பரின் தந்தைக்கு சடையனே கம்பர் பற்றிய தகவல் அனுப்புவது.

(05 × 3 = 15 புள்ளிகள்)

**3ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




3ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.
12-15 வரையான புள்ளிப் பரம்பலில் 2% த்தினரும்
08-11 வரையான புள்ளிப் பரம்பலில் 11% த்தினரும்
04-07 வரையான புள்ளிப் பரம்பலில் 26% த்தினரும்
00-03 வரையான புள்ளிப் பரம்பலில் 60% த்தினரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




3ஆம் வினாவுக்கு 24% ஆனோரே சரியான விடையளித்திருந்தனர். இது மிகக் குறைந்த அடைவு மட்டமாகும்.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- பாரதியார் கவிநயம் என்ற கட்டுரையில் உள்ள விடயங்களை எழுதாது பாரதியார் நாட்டின் விடுதலைக்கும் தமிழ்மொழிக்கும் ஆற்றிய பணிகளைப் பொதுவாக எழுதியிருந்தமை
- சடையப்பவள்ளலின் வள்ளன்மை பற்றி சுட்டிப்பாக விடை எழுதாது பொதுவாக வள்ளலுக்குரிய பண்புகளை எழுதியமை
- வினாவானது இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்பதை மாணவர் விளங்கிக்கொள்ளாமை
- விடைகளைத் தனித்தனியே எழுதத்தவறியமை
- பாடப்பரப்பினை மாத்திரம் மையமாகக் கொண்டு விடையினை எழுதாது பொதுவான நோக்கிலும் விடை எழுதியமை
- வினாவின் உட்பகுதியில் எந்தப் பகுதிக்கு கூடுதலான விடயங்களை உள்ளடக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாமை.
- விடயங்களைக் கூறி அதனை உறுதிப்படுத்த பாடலடிகளை எடுத்துக் காட்டத் தவறியமை.
- கட்டுரை வினா என்பதால் விடையமைப்பில் கூடுதலான விடயங்களை உள்ளடக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளாமை.
- வினாவானது தெளிவான தன்மைகுறைந்து காணப்படுகின்றது. புள்ளியிடலில் இரண்டு பகுதிக்கும் சமமாக புள்ளி வழங்கப்படவில்லை. முதற்பகுதிக்கு 04 புள்ளிகளும் பிற்பகுதிக்கு 11 புள்ளிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமான விளக்கத்தினை வினாப்பத்திரம் கொண்டிருக்கவில்லை.

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- பாடத்துணை நூலிலுள்ள செய்யுள், உரைநடை இலக்கியப் பரப்புகளை ஆதாரமாகக் கொண்டே விடைகள் எழுதப்படுதல் வேண்டும் என்பது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின்போது வலியுறுத்தப்படுதல் வேண்டும்.
- பொதுவாக விடை எழுதுவதால் உரிய புள்ளிகளைப் பெற முடியாது என்பது பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தப்படல் அவசியமானது.
- வினாவைக் கருத்தூன்றி வாசித்து வினவி நிற்கும் பொருளைக் கண்டறிவதற்கு பயிற்றுவித்தல்.
- மாதிரிப் பயிற்சி வினாக்களை வழங்குதல்
- வினாப் பகுப்பின் தன்மையை அறிந்து ஒவ்வொரு பகுதிக்கும் தேவையான அளவில் விடை எழுத பயிற்றுவித்தல்
- கூறிய விடயங்களை உறுதிப்படுத்தப் பாடலடிகளை எடுத்துக்காட்ட வேண்டும் என்பதை தெளிவுபடுத்தல்

**வினா இல. 4**

**4.** ***தமயந்தியின் சுயம்வரத்தின்போது சுயம்வர மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் புலவர் விபரிப்பதிலுள்ள சிறப்புகளை விளக்குக.***

***அல்லது***

***சொல்வன்மை பற்றியும் பயனில சொல்லாமை பற்றியும் வள்ளுவர் கூறியுள்ளவற்றைத் தெளிவாக விளக்குக.***
***(15 புள்ளிகள்)***

**சுயம்வர மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை புலவர் சித்திரிப்பதிலுள்ள சிறப்பு**

- தேவர்களை நளனுருவத்தில் சுயம்வர மண்டபத்தில் கண்ட தமயந்தியின் மனத் தடுமாற்றத்தை - “ஊசலாடுற்றாள் உளம்” என்று வருணிப்பது
- தமயந்தி தெய்வத்திடம் வேண்டல்
- சுயம்வரத்திற்கு அனைவரும் வருதல் - மன்னர், தேவர் - மற்றேவர்வாராதார்.
- தமயந்தியைக் கண்டு நாணமுற்று வாட்டமடைதல். - இங்கு தமயந்தியின் அழகு சிறப்பிக்கப்படல்
- தேவர்களை அவள் அடையாளங் கண்டதை விபரித்தல் தமயந்தியின் அறிவாற்றல் சிறப்பிக்கப்படல்.
- தமயந்தி நளனுக்கு மாலை சூட்டியமை
- நளனுக்கு மாலை சூட்டியதில் தேவரது வெட்கமும், மன்னரது மயக்கமும் உலகத்தோர் மகிழ்ச்சியும் குறிப்பிடப்படல்.
- கவிச்சிறப்பு :- (நிகழ்ச்சிகள் பற்றிக் கூறும் போதும் விளக்கப்படலாம்.)
  தமயந்தியின் அழகு நலன்களைப் பலவாறு புகழ்வது
  **“பூவரைந்த மாசில்லாப் பூங்குழலாள்”**
  **“புணுக்கழகளிக்கும் பொற்றொடி”**
  **“நறுந்தாமரை விரும்பும் நன்னுதல்”**
  **“பொன்மாலை சூட்டினாள் பொன்”**

வெற்றி பொருந்திய மன்னர்களின் முகம் வெளுத்ததை “ செந்தாமரை முகம் போய் வெண்டாமரையாய் வெளுத்தவே” எனக் குறிப்பிடுவது.

(நிகழ்ச்சிகள் 10 புள்ளிகள்)
(சிறப்பு 05 புள்ளிகள்)
(15 புள்ளிகள்)

**அல்லது**

**சொல்வன்மை**

- சொல்லக்கருதிய சொல்லை நேர்த்தியாகத் தேர்ந்து சொல்லுதல். (பிறிதோர் சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து, சொற்தேர்வு அவசியம், பிறிது பொருள் பயப்பது, வெற்றுச் சொல் முதலியவற்றை பேசக் கூடாது. இதனால் சொற்தேர்வின் அவசியம் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.)
- சொல்ல வல்லானை வெல்வது அரிது<br>சொல்வல்லானுக்கு சொற்சோர்வின்மை<br>அவை அஞ்சாமை முதலியன இருக்க வேண்டும்<br>அவ்வாறு இருப்பானாயின் அவனை வாதத்தில்<br>பிறர் வெல்லல் மிக அரிது. இதனால் சொல்வன்மையாளன் அடையும் சிறப்புக் கூறப்பட்டது.

**பயனில் சொல்லாமை**

- தூய அறிவுடையோர் பயனுள்ள சொல்லையே சொல்வார்கள். மறந்தும் கூட பயனில்லா சொற்களைப் பேசமாட்டார்கள். இதனால் பயனற்ற சொல்லின் இழிவு புலப்படுத்தப்பட்டது.
- எந்தச் சொல்லையும் சொல்லுவதாக இருந்தால் பயனுள்ள சொல்லையே பேச வேண்டும். ஆகவே பயனற்ற சொற்களைப் பேசுதலைத் தவிர்க்க வேண்டும் என ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

(குறள் விளக்கம் 4 × 3 = 12 புள்ளிகள்)

(நுணுகி ஆராய்தல் = 03 புள்ளிகள்)

(12 + 3 = 15 புள்ளிகள்)

## 4 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்




இதில்,

12-15 வரையான புள்ளிப் பரம்பலில் 11% த்தினரும்
08-11 வரையான புள்ளிப் பரம்பலில் 24% த்தினரும்
04-07 வரையான புள்ளிப் பரம்பலில் 31% த்தினரும்
00-03 வரையான புள்ளிப் பரம்பலில் 34% த்தினரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவும் கட்டாய வினாவாகும்.
4ஆம் வினாவுக்கு 43% ஆனோர் மாத்திரமே சரியான விடையளித்திருந்தனர். இது மிகக் குறைந்த அடைவு மட்டமாகும்.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- தமயந்தியின் சுயம்வரத்தின்போது நடைபெற்ற நிகழ்ச்சிகள் தொகுத்து எழுதப்பட்டிருந்தனவேயன்றி விபரிப்பதிலுள்ள சிறப்புகள் எடுத்துக்காட்டப்படாமை
- சொல்வன்மை பற்றியும் பயனில் சொல்லாமை பற்றியும் வள்ளுவரது கருத்துக்களைத் தெளிவாக விளக்குவதற்குப் பதிலாக குறள்களையும். குறள்களின் கருத்துக்களையும் எழுதியிருந்தமை.
- புலவர் விபரிப்பதிலுள்ள சிறப்புக்களை எழுதாது நளவெண்பா சுயம்வர காண்டத்தில் உள்ள விடயங்களைக் கதையாக எழுதியமை
- நிகழ்வுகளையும் சிறப்புக்களையும் இணைத்துத் தெளிவின்றி எழுதியுள்ளமை
- வினாவின் பருமனுக்கு ஏற்ப பூரணமான விடயங்களை உள்ளடக்கத் தவறியுள்ளமை.

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- விளக்குக என்ற வினாப்பதத்தின் பொருளை விளங்கி கட்டுரை வகையில் விடைகளை எழுதுவதற்கான பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குதல்.
- குறிப்பாக பாடலில் காணப்படும் விடயங்களை விளக்க வேண்டும்.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- திருக்குறளின் வினவப்பட்ட வினாக்களுக்கு வள்ளுவரின் கருத்துக்களை எழுதாமல் தனிப்பட்ட (சொந்த) கருத்தினை எழுதியுள்ளமை
- சொல்வன்மை, பயனிலை கொள்ளாமை எனும் விடயப்பரப்பினுள் உள்ளடங்கும் திருக்குறள்களை சரியாகப் எழுதாமை
- கூறிய கருத்துக்களுக்கு ஏற்ற சரியான திருக்குறளை எடுத்துக்காட்டத் தவறியுள்ளமை
- நுணுகி ஆராய்ந்து விடை எழுதத் தவறியுள்ளமை

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- குறிப்பாக பாடலில் காணப்படும் விடயங்களை விளக்க வேண்டும்.
- அதன் சிறப்புக்கள், அணிகளை எடுத்துக் காட்ட வேண்டும்.
- நிகழ்வுகளை விபரித்து எழுதி, அவற்றைப் பாடலடிகளுடனான சான்றாதாரங்களுடன் எடுத்துக் காட்ட வேண்டும்.
- பாடலில் சம்பவங்கள் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றன என அணியினை எடுத்துக் காட்டி விளக்க வேண்டும்.
- திருக்குறளை அந்தந்தத் தலைப்புக்களினுள் விளக்குதல் வேண்டும் என வலியுறுத்தல்
- திருக்குறளை விளக்கும்போது நுணுகி ஆராய வேண்டும் என்பதை வலியுறுத்தல். வேண்டும்.

## 5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

**5.** ***'ஒரு பதிவிரதையின் சரித்திரம்'*** *என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.*

(i) *தனது யோகபலம் பற்றி யௌவன சந்நியாசி நினைத்தது யாது ?*

(ii) *பதிவிரதை, கசாப்புக்காரன் ஆகியோர் தமது யோகபலம் பற்றிக் குறிப்பிட்டவை யாவை ?*

(iii) *இவற்றால் யௌவன சந்நியாசியின் மனத்தில் ஏற்பட்ட மாற்றம் யாது ?*

*(10 புள்ளிகள்)*

**5ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) தனது யோகபலம் பற்றி யௌவன சந்நியாசி நினைத்தது.

- பறவைகள் அவரது யோக பலத்தால் அழிந்தமையைக் கண்டதும் கர்வம் ஏற்பட்டுவிட்டது. அதனால் தான் அன்னங் கேட்ட வீட்டிலே தாமதம் ஏற்பட்ட போது தன்னை மதிக்கவில்லையே என்று கோபமும் எழுந்தது. கசாப்புக்காரனை ஏளனமாக நினைத்தது.

(2 புள்ளிகள்)

(ii)
- பதிவிரதை : ஒரு பெண்ணுக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்வது யோகம். கன்னியர் கடமை, மனைவியின் கடமை என விதிக்கப்பட்ட கடமையைச் செவ்வனே செய்தால் யோகம் பெறலாம். (3 புள்ளிகள்)

- கசப்புக்காரன் :- தந்தை தாய்க்குச் செய்யும் பணிவிடையில், செய்யும் தொழிலை தெய்வமாக நினைத்து செவ்வனே செய்தலில், சிருகஸ்தனுக்குரிய கடமைகளைச் செய்தலில், யோகம் பெறலாம். போலி வேடத்தால் யோகம் பெறமுடியாது.

(3 புள்ளிகள்)

(iii) யௌவன சன்னியாசியின் மனதில் ஏற்பட்ட மாற்றம் :
முதலில் பதிவிரதையின் வார்த்தைகளால் அகந்தை அற்றுப் போனது. பின்னர் கசாப்புக் காரனை மதிக்கத் தோன்றியது. வியாச கீதை கேட்டதும் மனதில் ஆனந்தம் பொங்கியது.

(2 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)
(4 X 4 + 2 = 10 புள்ளிகள்)

**5 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

**வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




5ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 16% த்தினரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 21% த்தினரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 31% த்தினரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 32% த்தினரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும் இது மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவ்வினாவின் i ஆம் பிரிவுக்கு 52% ஆனோரும், (iii) ஆம் பிரிவுக்கு 51% ஆனோரும் சரியாக விடையளித்திருந்தனர். இலகுத்தன்மை குறைந்த உபபிரிவாக 5 (ii) காணப்படுகிறது. இதன் இலகுத்தன்மை 43% ஆகும்.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- பதிவிரதை, கசாப்புக்காரன் ஆகியோரின் யோகபலம் தெளிவாகக் குறிப்பிடப்படாமை
- வினாவின் பகுதிகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமை
- வினாவின் எந்தப் பகுதிக்கு கூடுதலான விடை எழுத வேண்டும் என்பதை அறிந்து எழுத வேண்டும்.
- வினாவின் பகுதிகளுக்கு புள்ளியிட்டுக்காட்டாமை
- பதிவிரதை, கசாப்புக் கடைக்காரன் என்போரது யோகபலம் பற்றிய தெளிவின்மை. கசாப்புக் கடைக்காரன் யோகபலம் பெற்றவன் என்பதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு மாற்றம் ஏற்படாமை

**பெறுபேற்றினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- வினாவைச் சரியாக விளங்கி விடையளிப்பதற்கான பயிற்சிகளை வழங்குதல்
- ஆசிரியர்கள் இத்தகைய மனப்பாங்கு மாற்றத்தினை மாணவர் மத்தியில் ஏற்படுத்துவதற்காக பல்வேறு பாடப்பரப்புகளில் இருந்தும் உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்க வேண்டும்.

**வினா இல. 6**

**6.** *பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.*

*ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்*
*காணிய சென்று கதவடைத்தேன் - நாணிப்*
*பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல*
*வருஞ் செல்லும் பேருமென் நெஞ்சு*

(i) *இப்பாடல் இடம்பெறும் நூல் யாது? இங்கு கோதை எனக் குறிப்பிடப்படுபவன் யார்?*
(ii) *உலாவரும் அவனது தோற்றப் பொலிவினை விளக்குக.*
(iii) *காதல் வசப்பட்ட தலைவியின் மனநிலை எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் வகையினை விளக்குக.*

*(10 புள்ளிகள்)*

**6ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) பாடல் இடம்பெறும் நூல் - முத்தொள்ளாயிரம்
கோதை - சேரன்

(ii) அரசனது தோற்றப் பொலிவு

- தெரிந்தெடுத்த பசுமையான பொன்னாபரணங்களை அணிந்துள்ளான்.
- தளிரோடு தொடுக்கப்பட்ட மலர் மாலையையும் அணிந்துள்ளான். இதனால் அவனது அலங்காரம் நிறைந்த தோற்றத்தின் அழகு கூறப்பட்டுள்ளது.

(iii) தலைவியின் மனநிலை :- நெஞ்சு ஒரு நிலையில் இல்லாது தடுமாறுகின்றது.

உவமை - செல்வனாயிருந்து வறியவனாகிவிட்ட ஒருவன், பிறிதொரு செல்வனிடம் இரக்கச் சென்று நாணம் தடுக்க போவதும் வருவதுமாக எவ்வாறு அவஸ்த்தைப்படுவானோ அவ்வாறே தலைவியின் நெஞ்சமும் தடுமாறுகிறது.

(5 புள்ளிகள்)

(02+03+05 = 10 புள்ளிகள்)

**6ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




இதில்,
08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 29% த்தினரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 21% த்தினரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 24% த்தினரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 26% த்தினரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் III இல் தெரிவு வினாக்களில் ஒன்றாக 6 ஆம் வினா அமைந்துள்ளது. இவ்வினாவை 50% ஆனோர் தெரிவு செய்திருந்தனர். இதன் 3 உப-பிரிவுகளிலும் இலகுத்தன்மை கூடிய உபபிரிவாக 6 (i) அமைந்துள்ளது. இதன் இலகுத்தன்மை 76% ஆகும். உபபிரிவு 6 (ii) இலகுத்தன்மை குறைந்ததாக இருப்பதுடன் அதன் இலகுத்தன்மை 46% ஆகும்.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- வினாக்களுக்கான புள்ளியில் பகுதிக்கான புள்ளிகளைத் தனித்தனியே வழங்காமை
- வினாவிற்கு விடையளிப்பதற்கு கொடுக்கப்பட்ட பாடலினை விளங்கிக் கொள்ளாமை
- பொருளை அறிந்து விடை அளிக்கவில்லை
- கோதை எனும் பெயரை பெண்ணின் பெயராகக் கருதியமை

**ஆலோசனைகள்**

- பாடலை வாசிக்க வேண்டும்
- அருஞ்சொற்களின் பொருளை அறிந்து பாடலின் பொருளைக் கண்டறிந்து விடை எழுத வேண்டும்
- விடை கூடுதலான விடயங்களை உள்ளடக்கி அமைய வேண்டும்.
- ‘கோதை’ என்பது சேரமன்னன் என வலியுறுத்தி கற்பிக்க வேண்டும்.

வினா 7.

**7.** *நல்ல மரமும் நச்சு மரமும் கட்டுரையின் ஆசிரியர் நல்லார் கைப்பட்ட செல்வம் பலருக்கும் பயன்தரும் என்பதை திருவள்ளுவர் அருளிய மூன்று குறள்களை ஆதாரமாகக் காட்டி விளக்கியிருக்குமாற்றை ஆராய்க.*

*(10 புள்ளிகள்)*

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**நல்லார் கைப்பட்ட செல்வம் பலருக்கும் பயன்தரும் ...... (ஆதாரம் குறள்)**

(i) ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

- இவ்வாறு ஊரில உள்ள நீர் நிலை ஊர் மக்களுக்குப் பயன்படுவது போல அறிவுடையோர் செல்வம் எல்லோருக்கும் பயன்படும்.

(ii) "பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கட்படின்"

- நல்ல மரம் நடுவூரில் பழுத்தால் - அது சகலருக்கும் விருந்தாவது போல நல்லவனுடைய செல்வம் யாவர்க்கும் உதவும்.

(iii) " மருந்தாகித் தப்பா மரத்தாற்றால் செல்வம்

- ஒரு மரத்தின் சகல பாகங்களும் மனிதருக்குப் பயன்தருவது போல நல்லார் கைப்பட்ட செல்வமும் சகலருக்கும் நல்லமுறையில் பயன்படும்.

பொய்கை தாகம் தீர்த்தது. மரம் குளிர் நிழல்தந்து, பசியாறப் பழங்கள் தந்து தலை நோய் தீர்க்கவும் மருந்தாயது. அதுபோல செல்வம் உடைய நல்லார், ஈர நெஞ்சினராய் வரையாது வழங்குபவராய் தமக்கென வாழாது பிறர்க்குரியவராய் வாழ்வார். இவ்வாறு பயன்தர வாழ்வதே பண்புடைமையாகும்.

(ஆதாரம் 3 × 2 = 6 புள்ளிகள்)
(விளக்கம் 4 புள்ளிகள்)
(06+04 = 10 புள்ளிகள்)

**7ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




இதில்,
08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 50% த்தினரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 22% த்தினரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 16% த்தினரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 12% த்தினரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுத்தன்மை




வினாப்பத்திரம் III இன் 7ஆம் வினாவும் தெரிவுக்குரிய ஒரு வினாவாகும். இவ்வினாவை மிகக் குறைந்தளவானவரே தெரிவு செய்திருந்தனர். இவ்வினாவின் இலகுத்தன்மை 25% ஆக உள்ளது. இது மிகவும் குறைந்த அடைவு மட்டமாகக் காணப்படுகிறது.

**விடையளித்தலில் காணப்பட்ட இயல்புகள்**

- திருக்குறள்களை ஆதாரமாக எடுத்துக்காட்டத் தவறியமை
- கூறப்பட்ட கருத்துக்களுக்கு பொருத்தமான திருக்குறளை எடுத்துக் காட்டத் தவறியமை

**ஆலோசனைகள்**

- ஒவ்வொரு சொற்களின் கருத்தையும் உதாரணங்களுடன் விளக்கிக் கற்பித்தல்
- பாடத்தில் கூறப்பட்ட விடயங்களைத் திருக்குறள்
- கருத்துக்களும் திருக்குறளும் மாறாமல் இருக்க அந்தந்த திருக்குறளின் கருத்தை மனனம் செய்யத் தூண்டுதல்

### 2.3.3 வினாப்பத்திரம் III இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளின் தொகுப்பும் பொதுவான ஆலோசனைகளும்

**பொதுவான இயல்புகள்**

★ மாணவர்கள் இலக்கியப் பாடப்பரப்பில் பூரண அறிவைக் கொண்டிருக்கவில்லை

★ விடையளித்தலில் 10 இற்கும் குறைவான புள்ளிகளை 77% மாணவர்கள் பெற்றுள்ளனர்.

★ மனனத் திறன் குறைவாகக் காணப்படுகின்றது.

★ பாடல்களை, உரைநடைகளை இரசனையுடன் நயந்து கற்பது குறைவாக உள்ளது.

★ அரும்பதங்களுக்கான பொருள் விளக்கங்களை சரியாகப் புரிந்துகொள்ளாமை

**ஆலோசனைகள்**

★ இலக்கியம் சம்பந்தமான பொது அறிவுப் போட்டிகளை நடாத்துதல்.

★ பாடசாலை நிகழ்வுகளில் இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்துதல்.

★ ‘சொல்லாடுகளம்’ போன்ற நிகழ்வுகளுக்கு ஊக்கமளித்தல்.

★ கணிப்பீட்டில் பாவோதல் போன்றவற்றுக்கு முக்கியமளித்தல்.

★ சொல், சொற்றொடர், அணிச் சிறப்புக்களை இணங்கண்டு கற்பித்தல்.

★ பாடப்பரப்பினை உள்ளடக்கியவாறான அருஞ்சொற்பொருள் அகராதி தயாரித்தல்.

★ அகராதி பார்க்கும் பழக்கத்தினை ஏற்படுத்துதல்.

★ படைப்புக்கள், நூல், நூலாசிரியர் ஆகிய தயாரிப்புக்களை உள்ளடக்கி பட்டியல் தயாரித்த்ல்.

★ நூல், நூலாசிரியர், நூல் எழுதப்பட்ட காலம், பின்னணி போன்ற பொதுவான விளக்கத்தினை ஆசிரியர் வழங்குதல்.

## பகுதி III

# 3 விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

## 3.1 விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்

பொதுவானவை

- ✶ மாணவர்கள் வினாப்பத்திரங்களிலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்?, கட்டாய வினாக்கள் எவை?, நேர ஒதுக்கீடு எவ்வளவு?, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக் கொண்டு, பின்னர் வினாக்களை சரியாக வாசித்து விளங்கி விடையளித்தல் வேண்டும்.
- ✶ முதலாம் பகுதிக்கு விடையளிக்கும்போது மிகச் சரியான ஒரு விடையைத் தெரிவுசெய்து எதிரேயுள்ள கூட்டுக்குள் தெளிவாக புள்ளடியிடல் வேண்டும்.
- ✶ இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.
- ✶ எழுத்துக்களைப் பிழையின்றி தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.
- ✶ ஒவ்வொரு விடைத்தாள்களின் இரு பக்கத்திலும் சுட்டெண்களைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.
- ✶ வினா இலக்கத்தையும் பிரிவு வினாக்களின் இலக்கங்களையும் விடை எழுத ஆரம்பிக்குமுன் தெளிவாக சரியாக குறிப்பிட வேண்டும்.
- ✶ வினாக்கள் கேட்கப்பட்டிருப்பதற்கேற்ப சுருக்கமாயும், விளக்கமாயும் விடையளித்தல் நன்று.
- ✶ வினாக்களுக்கேற்ப விடையளிக்கும்போது, தர்க்கரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் விடையளித்தல் வேண்டும்.

**பாடரீதியானவை**

- ★ மாணவர்கள் நவீன அறிவுக் கருவூலங்களைத் தேடிக் கற்று அவற்றைப் பொருத்தமான இடங்களில், குறிப்பாக வினாப்பத்திரம் II இல் கட்டுரை, கடிதம் போன்ற எழுத்தாக்கங்களுக்கு பிரயோகிக்க வேண்டும்.

- ★ பாடங்களைக் கற்பதன் மூலம் பெறும் அறிவை **வினாக்களுக்கு ஏற்ப** உருமாற்றி விடையளிக்கும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- ★ வினாக்களில் வினவப்படுகின்ற நன்மை-தீமை கூறுதல், சாதகம்-பாதகம் கூறுதல் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு விடையளித்தல் அவசியமாகும்.

- ★ **கற்றல் இடமாற்றம்** இங்கு வேண்டப்படுகிறது. அதாவது தாம் கற்ற விடயங்களைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்திக் கொள்ளும் திறன் அவசியமாகும்.

- ★ சொல்லாக்கம், வாக்கிய அமைப்பு, புதிய சொற்களின் பிரயோகம், வழுக்களைத் தவிர்த்தல் (திணை, பால், எண், இடம், காலம் ஆகிய வழுக்கள்) சொற்பிழைகளற்றிருத்தல்.

- ★ சொந்த மொழிநடையில் புதிய சிந்தனைகளைப் புகுத்தி விடையளிக்கும் திறனை விருத்தி செய்ய வேண்டும்.

- ★ செய்யுட்களுக்கு பொருள் விரிப்பதிலும் அவற்றை நயப்பதிலும் அதிகமதிகமான பயிற்சிகளைச் செய்வது அவசியமாகும்.

- ★ ஆக்க வினாக்களுக்கு ஆழமான பொருள் பொதிதலும் அழகான அமைப்பைக் கடைப்பிடிப்பதும் பிரதானமானதோடு, அவை புள்ளிகளை ஈட்டிக்கொள்ளும் வழிமுறைகளும் ஆகும்.

3..2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்**

- பாட விடயத்தைக் கற்பித்த பின் உடனுக்குடன் வினா விடைப் பயிற்சிகள் வழங்கி மதிப்பீடு செய்வது அதிக பலனைத் தரும்.

- ஆசிரியர்களும் அதேபோல் மாணவர்களும் தமிழ்மொழி, இலக்கியம் சார்ந்த தகவல்களைச் சேகரிக்கவும், அதன்படி சுயமாகக் கற்றலில் ஈடுபடவும் தூண்டுதல் வேண்டும்.

- மொழி கற்றல் கற்பித்தலின்போது அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பவற்றில் தேர்ச்சி பெறும் வகையில் கற்றல் கற்பித்தல் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

- மொழிச் செம்மை பற்றிய கரிசனை அதிகம் வேண்டப்படுகிறது. எழுத்துப் பிழைகள், இலக்கண வழுக்களை தவிர்ப்பதற்கான பயிற்சிகளும் ஆழமான, அழகிய சொந்த மொழிநடையில் விடைகளை முன்வைக்கும் திறனையும் விருத்தி செய்வதற்கு அவ்வப் பாடமுடிவில் மேலதிக பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்யத் தூண்டுதல்.

- புதிய நூல்களைத் தேடி வாசிக்கவும், அவற்றிலிருந்து பெறும் தகவல்களைக் கொண்டு கட்டுரை, கடிதம், சிறுகதை, துண்டுப்பிரசுரம் போன்ற ஆக்கங்களை உயர்ந்த மட்டத்தில் படைப்பதற்கும் ஊக்குவிப்பதோடு அவற்றை தினசரி / வாரப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு அனுப்பி வைத்தல் சிறந்தது.